மலர்-5 இதழ்-120 ஆகஸ்ட் 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine
ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

மாதமிருமுறை

ஆன்மிகமலர் mobile app
GET IT ON Google Play



e- magazine

www.aanmeegamalar.com

e- magazine

## இரவு-பகல் யாருக்கு பலம் யாருக்கு பலவீனம்

# மன்னனிடம் மூக்குத்தி கேட்ட அம்மன்

## திருமணத்தடை நீங்க...

1. உத்வாகநாதசுவாமி திருக்கோவில், திருமணஞ்சேரி.
2. கல்யாணபசுபதீஸ்வரர் திருக்கோவில், கரூர்.
3. கல்யாணவேங்கடரமணசுவாமி திருக்கோவில், தான்தோன்றிமலை.
4. கைலாசநாதர் திருக்கோவில், தாரமங்கலம்.
5. சென்னமல்லீஸ்வரர், சென்னகேசவ பெருமாள் திருக்கோவில், பாரிமுனை.
6. பட்டீஸ்வரர் திருக்கோவில், பேரூர். கோவை.
7. நித்யகல்யாண பெருமாள் திருக்கோவில், திருவிடந்தை.
8. வரதராஜபெருமாள் திருக்கோவில், நல்லாத்தூர்.
9. வீழிநாதேஸ்வரர் திருக்கோவில், திருவீழிமழலை.



## குடும்ப ஒற்றுமை ஓங்க...

1. அகத்தீஸ்வரர் திருக்கோவில், வில்லிவாக்கம்.
2. அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவில், திருச்செங்கோடு.
3. அங்காளம்மன் திருக்கோவில், முத்தனம்பாளையம்.திருப்பூர்
4. கல்யாணவிகிர்தீஸ்வரர் திருக்கோவில், வெஞ்சமாங்கூடலூர்.
5. சங்கரநாராயணசுவாமி திருக்கோவில், சங்கரன்கோவில்.
6. நவநீதசுவாமி திருக்கோவில், சிக்கல்.
7. பள்ளிக்கொண்டீஸ்வரர் திருக்கோவில், ஊத்துக்கோட்டை,சுருட்டப்பள்ளி.
8. மனிஹடா ஹெத்தையம்மன் நாகராஜா திருக்கோவில், மஞ்சக்கம்பை.
9. மாரியம்மன், காளியம்மன் திருக்கோவில், ஊட்டி
10. லட்சுமி நரசிம்மர் திருக்கோவில், பரிக்கல்.
11. வெக்காளியம்மன் திருக்கோவில், உறையூர்
12. ஸ்தலசயனப்பெருமாள் திருக்கோவில், மாமல்லபுரம்.

## செல்வ வளம் சேர...

1. அனந்தபத்மநாபசுவாமி திருக்கோவில், அடையாறு.
2. அஷ்டலட்சுமி திருக்கோவில், பெசண்ட்நகர், சென்னை.
3. கைலாசநாதர் திருக்கோவில், தாரமங்கலம்.
4. பக்தவச்சலப்பெருமாள் திருக்கோவில், திருநின்றவூர்.
5. மாதவப்பெருமாள் திருக்கோவில், மயிலாப்பூர்.

## நிலம், வீடு, மனை பிரச்சனை தீர...

1. அக்னீஸ்வரர் திருக்கோவில்,திருப்புகலூர்.
2. தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோவில், தீர்த்தமலை, அரூர்.
3. பூவராகசுவாமி திருக்கோவில், ஸ்ரீமுஷ்ணம்.
4. வராகீஸ்வரர் திருக்கோவில், தாமல். காஞ்சீபுரம்.

## தீவினைகள் அகன்றிட...

1. காலபைரவர் திருக்கோவில், குண்டடம்.
2. காளிகாம்பாள் திருக்கோவில், தம்புசெட்டி தெரு, சென்னை.
3. குறுங்காலீஸ்வரர் திருக்கோவில், கோயம்பேடு.
4. சரபேஸ்வரர் திருக்கோவில், திருபுவனம்.
5. சிங்காரத்தோப்பு முனீஸ்வரர் திருக்கோவில், நடுப்பட்டி, மொரப்பூர்.
6. பண்ணாரிமாரியம்மன் திருக்கோவில், பண்ணாரி.

## பெண்களின் பிரச்சனை தீர்வுகாண...

1. தாயுமானசுவாமி திருக்கோவில், மலைக்கோட்டை, திருச்சி.
2. பாதாள பொன்னியம்மன் திருக்கோவில், கீழ்ப்பாக்கம், சென்னை.
3. மகாதேவர் திருக்கோவில், செங்கனூர்.

# வியாபாரம், தொழிலில் முன்னேற்றம் வேண்டுமா?

# இராமானுஜர் காலத்தில் திருப்பதியில் கடைபிடிக்கப்பட்ட தரிசன முறையை கடைபிடியுங்கள்

அதிகப்படியான வருமானத்தையும்,வியாபாரத்தில் செழிப்படைய வேண்டியும் திருப்பதி செல்பவர்கள், திருமலையில் ஏழுமலையானை தரிசிக்கும் முன், முதலில் கீழ் திருப்பதியில் கோவிந்தராஜபுரத்தில் எழுந்தருளும் கோவிந்த ராஜப் பெருமாள், பிறகு அலர்மேல்மங்கைத் தாயார், அதற்குப்பின் திருமலை சுவாமி புஷ்கரணிக் கரையில் அருள் பாலிக்கும் வராக மூர்த்தியை தரிசித்த பின்பே ஏழுமலையானை தரிசனம் செய்ய வேண்டும்.

இதற்கு காரணமும் உண்டு.

"பத்மாவதி தாயார், ஆகாசராஜன் ஏர் உழும் பொழுது கிடைத்த பேழையில், ஆயிரம் இதழ்கொண்ட தாமரை மலர் மீது கிடந்த மையால் அலர்மேல் மங்கை எனப் பெயரிட்டு வளர்த்தான்.

'அலர்' என்றால் தாமரை, 'மங்கை' என்றால் நற்குணங்கள் பொருந்திய பெண். தாமரை மலர் மீது நற்குணங்கள் பொருந்திய பெண்ணாக வீற்றிருப்பவள் என்ற பொருளில் அலர்மேல்மங்கை என்று அழைக்கின்றனர்.

இப்பொருளைக்கொண்ட பதமே வடமொழியில் "பத்மாவதி" என்றும், அலர்மேல்மங்கை எனும் தமிழின் திரிபே "அலமேலு மங்கா" என தெலுங்கிலும் கன்னடத்திலும் அழைக்கப்பட்டு வருகிறது.








# இராமானுஜர் காலத்தில் கடைபிடிக்கப்பட்ட தரிசன முறை

1. முதலில் கீழ் திருப்பதியில் வீற்றிருக்கும் கோவிந்தராஜ பெருமாளை வணங்க வேண்டும்...!

2. அதன் பிறகு, அலர்மேல்மங்காபுரம் சென்று பத்மாவதி தாயாரை தரிசித்து மனமும், இதயமும் ஒருங்கே இணைத்து வணங்க வேண்டும்...!

3. அதன் பிறகு, திருமலையின் மீது ஏறிய பிறகு ‘வராக தீர்த்த கரையில்’ கோவில் கொண்டிருக்கும் ‘வராக மூர்த்தியை’ தரிசித்து வணங்க வேண்டும்...!

4. அதற்கு பிறகுதான் மலையப்பன் என்று சொல்லப்படும், ஏழுமலை வாசனை, கோவிந்தனை, திருவேங்கடவனை பூஜிக்க வேண்டும்உளமாற சேவிக்க வேண்டும்...!



மேற்கண்டவழிமுறை யானது ராமா னுஜர் காலத் தில் அவரால் தொடங்கப்பட்டு, அதன் பிறகுவந்த அனைத்து ஆச்சார் யர்களும் கடை பிடித்து வந்த சம்பிரதாயம் ஆகும்...!

பத்மாவதியை மணம் முடிக்க திருமால் வெங்கடாசலபதியாக பூலோகம் வந்தார். ஆகாச ராஜனின் எல்லைக்குட்பட்ட வகுளாதேவியின் ஆசிரமத்தில் தங்கி, பத்மாவதியை மணம் செய்து கொண்டார்.

இத்திருமணத்திற்காக குபேரனிடம் ஆயிரம் வராகன் பொன்னை கடனாகப் பெற்று இன்னும் வட் கட்டி கொண்டு உள்ளான் பரந்தாமன்.

அதே சமயம்....

திருச்சானூர் பத்மாவதி தாயார் தரிசனம் கிடைக்க கொடுத்து வைத்திருக்க வேண்டும். தன் மனைவி பத்மாவதியை தரிசிப்பவர்களுக்கு சகல செல்வங்களும் அளிக்குமாறு வேங்கடவன் ஆணையிட்டுள்ளார். அவ்வாறு பத்மாவதி தாயாரிடம் செல்வத்தை பெற்றுக் கொள்ளும் பக்தர்கள் அதில் ஒரு பகுதியை தான் ஏழு மலையான் உண்டியலில் காணிக்கையாக செலுத்துகின்றனர்.

அதனால் முதலில் தாயரை தரிசனம் செய்து செல்வ செழிப்பை பெற வேண்டும். அதன்பின் அதற்கு வழிகாட்டிய பெருமாளை தரிசித்து, வேண்டுதலுக்குரியவற்றை காணிக்கையை கொடுக்க வேண்டும்.

புதிய வியாபாரம் துவங்குபவர்கள், பழைய வியாபாரம், தொழிலில் இன்னும் முன்னேற்றம் காண விரும்புபவர்கள் மேற்கண்ட முறைப்படி முதலில் தாயரை தரிசித்து ஆசி பெற்ற பின் பெருமளை தரிசித்தால் வியாபாரமும் தொழிலும் மென்மேலும் பெருகும்.



# சாஸ்திரப்படி கர்ப்பிணி பெண்கள் தேங்காய் உடைக்ககூடாது?

எந்த ஒரு நல்ல காரியம் செய்வதற்கு முன் கோவில்களில் தேங்காய் உடைப்பது இன்றும் வழக்கத்தில் உள்ள ஒன்றாகும்.

அதிலும் குறிப்பாக முதன்மைக் கடவுளான பிள்ளையாருக்கு தேங்காய் உடைக்கப்படுகிறது. கோவில்கள் எப்படி பல நூற்றாண்டுகள் கடந்து இன்றும் அழியாமல் இருக்கின்றதோ, அதே போல் கோவில்களில் பின்பற்றப்படும் வழிபாடுகளும் அழியாமல் தான் இருக்கின்றன.

அவ்வாறு வேதங்களில் சொல்லப்படுவதுஎன்ன வென்றால் பெண்கள் தேங்காய் உடைப்பது என்பது அவர்களுக்கு துன்பத்தை அளிக்கக் கூடிய செயலாகும்.

இந்தியாவில் தேங்காய் இல்லாத சடங்குகளே கிடையாது. சுபகாரியங்கள் என்றாலும் சரி, துக்க காரியங்கள் என்றாலும் சரி, அதில் தேங்காய் இல்லாமல் இருக்காது.

அதேபோல் கோவில்களில் கடவுளுக்கு படைக் கப்படும் முக்கியமான பொருளாக தேங்காய் இருக் கிறது கடவுளுக்கு படைக்கப்பட்ட தேங்காய் பக்தர்களுக்கு பிரசாதமாக கொடுக்கப்படுகிறது.

இயற்கை படைத்ததில் அற்புதம், அதிசயம் என்று தேங்காயை சொல்லலாம். தேங்காயில் இருக்கும் நீரும், அதன் உள்ளிருக்கும் சதைப் பற்றுள்ள பகுதியும் இன்றளவும் மனிதனால் மாசடையாமல், தூசிப்படாமல் தூய் மையாக இருப்பதனால்தான் கடவுளுக்கு படைக்கப்படுகிறது.

விநாயகருக்கு மிகவும் பிடித்த பொருள் தேங்காய். ஏனென்றால் விநாயகர் ஒரு பிறவி யில் முனிவராக அவதாரம் எடுத்திருந்தார். அவர் யாகத்திற்கு செல்லும்பொழுது அசுரன் ஒருவன் விநாயகரை வழி மறித்ததால் அவர் யாகத்திற்கு கொண்டுசெல்லும் தேங்காயை எடுத்து அசுரனை அடித்து விரட்டினார்.

எனவேதான் ஏதேனும் வண்டி வாகனங்கள் வாங்கும்பொழுதும், புதிய வீடு குடியேறும் பொழுதும் இது போன்ற எந்த ஒரு செயலை துவங்குவதற்கு முன்பும் தேங்காய் உடைத்து, நமக்கு வரப்போகும் தடைகளை தவிர்க்க கூறி விநாயகரை தொழுகிறோம்.

தேங்காய் உடைப்பதற்கு மற்றுமொரு காரண மும் உண்டு. தேங்காய் மனித உடலின் பிரதிபலிப்பாகும். நமது கர்வத்தை அழித்து ஆன்மாவைச் சுத்தப்படுத்தும் அடிப்படையில் தான் தேங்காயை கடவுளின் முன் உடைக்கின்றோம். தேங்காய் உடைப்பதில் இத்தனை சிறப்புகள் இருந்தாலும் ஒருபோதும் பெண்கள் தேங்காயை உடைக்கக்கூடாது.

பெண்கள் தேங்காய் உடைக்க கூடாதென்று சாஸ்த்திரங்கள் கூறுகின்றன. பெண்கள் வீட்டின் லட்சுமியாக கருதப்படுகிறார்கள். எனவே அவர்கள் இதனை செய்வதால் அது லட்சுமி தேவிக்கு கோபத்தையே உண்டாக்கும். ஏனென்றால் தேங்காய் உடைப்பதும் ஒரு விதத்தில் பலி கொடுப்பதற்கு சமமாகும். எனவே அவ்வாறான பலிகொடுக்கும் செயலியை பெண்கள் கட்டாயமாக செய்தல் கூடாது.

தேங்காய் என்பது ஒரு வித விதயாகும். இதனை அழிப்பது, உடைப்பது போன்ற செயல்கள் பெண்கள் செய்தால் அது ஒருவகையான பாவச்செயலாகும். பெண்களின் நலனுக்காகவும் அவர்களுக்கு தீராத துன்பம் ஏற்படக் கூடாது என்பதாலும்தான், கர்ப்பிணி பெண்கள் இந்த செயலில் ஈடுபடுவது சாஸ்திரப்படி தவறு என்று வரையறுத்துள்ளனர் நமது முன்னோர்.

கர்ப்பிணி பெண்களின் வயிற்றில் வளரும் குழந்தையும் ஒரு விதை போன்று தான். எனவே பெண்கள் அவர்கள் கையினால் ஒரு விதையை உடைப்பது நல்லதல்ல.





# ஊஞ்சல்

ஊஞ்சல் ஆடுவது எல்லோருக்கும் பிடித்த விஷயம். வீட்டில் இருக்கும் உபகரணங்களிலே பெண்களுக்கு அதிக மகிழ்ச்சியைத் தரக் கூடியது ஊஞ்சல்தான். முன்பெல்லாம் ஊருக்கு வெளியே ஆலமரத்தில் ஊஞ்சல் கட்டி பெண்கள் ஆனந்தமாக ஆடினார்கள்.

பின்பு படிப்படியாய் அது குறைந்து, காணாமல் போய்விட்டது.

இந்த ஊஞ்சல் ஆட்டம் உடல் ஆரோக்கியத்திற்கு மட்டுமல்ல, மன ஆரோக்கியத்திற்கும் ஏற்றது.

அதனால் தான் வீடுகளில் தவறாமல் ஊஞ்சல் அமைக்கிறார்கள். இடவசதி குறைவாக உள்ளவர் களும் வாங்கி பயன்படுத்தும் வகையில் ஊஞ்சல்கள் வடிவமைக்கப்பட்டு இப்போது விற்பனைக்கு வருகின்றன.

ஊஞ்சல் ஆடுவது கடவுளுக்குகூட மகிழ்ச்சி அளிக்கும் விஷயம் என்பதால்தான், கோவில்களில் இறைவனை ஊஞ்சல்களில் வைத்து சீராட்டும் பெருமை மிகு கைங்கர்யங்கள் இன்றும் நடந்துக் கொண் டிருக்கிறது.

ஊஞ்சலில் ஆடுவதால் மனதில் உள்ள எதிர்மறை எண்ணங்கள் மறைந்து பாசிடிவ் எண்ணங்கள் தோன்றுகிறது.

மகிழ்ச்சி பெருகி எதிர்காலத்தைப் பற்றிய வளமான எண்ணங் களும் தோன்றுகின்றன.

திருமணங்களில் `ஊஞ்சல் சடங்கு' இதன் அடிப்படையிலேயே நடத்தப்படுகிறது....!!!!

ஊஞ்சல் ஆடுவதால் மனச் சோர்வு நீங்கி உடல் உற்சாகம் பெறுகிறது.

நேராக அமர்ந்து கைகளை உயர்த்தி இரு பக்க சங்கலி களையும் பிடித்துக் கொண்டு வேகமாக ஆடும் போது முதுகுத் தண்டுக்கு ரத்த ஓட்டம் படர்ந்து மூளை சுறு சுறுப்பாகிறது.

கம்ப்யூட்டரில் மணிக்கணக் கில் உட்கார்ந்து முதுகுத்தண்டு வளைந்துப் போன இன்றைய பெண்கள் இந்த ஊஞ்சல்



புனிதவேல்



பயிற்சியை தினமும் செய்தால் முதுகுத் தண்டு வடம் பலம் பெற்று கழுத்துவலி குணமடைய வழி செய்கிறது.

தோட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஊஞ்சலில் ஆடுவது அதிக பலனை தரக் கூடியது. மரம் செடிகளிலிருந்து வரும் பிராணவாயு வேகமாக உடல் முழுவதும் பரவி ரத்தத்தை சுத்திகரிக்கும்.

இதயத்திற்கு சுத்தமான பிராண வாயுவை கொடுத்து இதயத்தை சீராக இயங்கச் செய்யும். தினமும் தோட்டத்தில் ஊஞ்சல் ஆடுவர்களுக்கு இதயநோய் கட்டுப்படும்.

ஊஞ்சல் ஆடுவதால் உடலில் ரத்த ஓட்டம் அதிகரித்து இதயத்திற்கு ரத்தம் சீராக செல்லும்.

சாப்பிட்டவுடன் அரைமணிநேரம் மிதமான வேகத்தில் ஊஞ்சல் ஆடுவது நல்லது. சாப்பிட்ட உணவு நன்கு செரிக்க இந்த ஆட்டம் உதவும்.

கோபமாக இருக்கும் போது ஊஞ்சல் ஆடினால் கோபம் தணியும்.

வெளியில் சுற்றியலைந்துவிட்டு வந்து ஊஞ்சலில் உட்காா்ந்து கண்களை மூடி தலையை சற்றே மேலே உயா்த்தி, இரு கைகளையும் ஊஞ்சல் பலகையில் பதியவைத்து ரிலாக்ஸாக ஆடினால் களைப்பெல்லாம் பறந்து, உடலின் ஒவ்வொரு பகுதியும் ஓய்வு பெற்று நிம்மதி ஏற்படும்.

பழங்காலத்தில் எல்லா வீடுகளிலும் வரவேற்பறையில் ஊஞ்சல் கட்டி வைத்திருப்பாா்கள்.

வீட்டுக்குள் வரும் தேவதைகள் ஊஞ்சலில் ஆடப் பிரியப்படுவாா்கள், ஊஞ்சலில் ஆடி நல்லது செய்வாா்கள் என்பதும் நம்பிக்கை.

சுப காரியங்களைப் பற்றி பேசும் போது ஊஞ்சலில் உட்காா்ந்து பேசுவதும் வழக்கமாக இருந்தது.

இல்லத்திற்கு அழகு சோ்க்கும் கலைப் பொருட்களில் ஊஞ்சலும் ஒன்று.

இதை ஒரு தெய்வீக ஆசனம் என்றும் கூறுவா்.

வாஸ்து படி வீட்டின் முகப்பில் ஊஞ்சல் அமைத்தால் நல்லது....!!!

தொகுப்பு: புனிதவேல்

தொடா்பு எண்: 9841807572

# இரவு பொழுது – பகல் பொழுது யாருக்கு பலம் யாருக்கு பலவீனம்

**அசுரா்களின் தோற்றம்:** தாமரையை இருப்பிடமாக கொண்ட பிரம்மதேவன் உலகங்களில் இருக்கக்கூடிய சிருஷ்டி தொழிலான படைப்பு தொழில் விஷயமாக ஒரு முகமாக சிந்தித்து கொண்டிருந்த பொழுது தாமச குணத்தின் விளைவினால் அசுரா்கள் தோன்றினாா்கள்.



அந்த தாமச குணத்துக்கு உண்டான தேகத்தை ஒழித்தாா். அதன் விளைவாக இருள் எங்கும் சூழ்ந்து இரவாக மாறிற்று.

**தேவா்களின் தோற்றம்:** இரவு பொழுதை கண்டதும் மனம் மாறிய பிரம்மதேவன் மீண்டும் சிருஷ்டியை உருவாக்க வேண்டுமென்று நினைத்து வேறு ஒரு தேகம் தரித்துக்கொண்டு சந்துஷ்டமாக இருக்க அவருடைய முகத்திலிருந்து சாத்வீக குணம் அதிகம் இருக்கக்கூடிய தேவ, தேவதைகள் தோன்றினாா்கள். தேவ, தேவதைகள் தோன்றிய அந்த உடலையும் விட்டுவிட்டாா். அந்த உடலிலிருந்து வெளியேறியதன் விளைவாக சாத்வீக குணம் நிறைந்து இருக்கக்கூடிய பகல் பொழுதாக மாறியது.

இதன் காரணமாக தேவா்கள் அனைவரும் பகலில் பலம் மிகுந்தவா்களாக இருக்கின்றனா். அசுரா்கள் யாவரும் இரவில் பலம் மிகுந்தவா்களாக இருக்கின்றாா்கள்.

– விஷ்ணு புராணம்

# மன்னனிடம் மூக்குத்தி கேட்ட அம்மன்



திருவிதாங்கூர் மகாராஜாவின் ஆட்சியில் கன்னியாகுமரி பகுதி இருந்த காலம். அந்த காலத்தில் பனையேறி ஒருவன் இருந்தான். அவனுக்கு தனக்கு ஒரு ஆண் குழந்தை வேண்டும் என்று நீண்ட நாட்களாக ஆசை. ஆனால் அவன் மனைவி ஒவ்வொரு முறை கருவுறும் போதும் அவனுக்கு பெண் குழந்தை மட்டுமே பிறந்து கொண்டு இருந்தது. ஒவ்வொரு முறையும் அவன் மனைவிக்கு பிரசவம் ஆனதும் அவன் முதல் மகள் தான் அவனிடம் வந்து குழந்தை பிறந்த செய்தியை சொல்லுவாள்.

இப்படியே அவனுக்கு 5 பெண் குழந்தைகள் பிறந்து விட்டன. இதனால் மனம் வருந்திய அவன் இனி நமக்கு பெண் குழந்தை பிறந்தது என்று நம் மகள் வந்து நம்மிடம் சொல்லும் போது நாம் பனையின் உச்சியில் இருந்தால் அப்படியே இரண்டு கைகளையும் மரத்தில் இருந்து விடுவித்து கீழே விழுந்து தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தான்.

இந்நிலையில் அவன் மனைவி 6வது முறையாக கருவுற்றாள். அப்போது வழக்கம் போல் அவனது முதல் பெண் ஓடி வந்து அப்பா அம்மாக்கு பிரசவம் ஆயிடுச்சு தங்கை பிறந்துருக்கா என்று சொன்னாள். ஆனால் அந்த நேரம் இவன் பனையில் இருந்து கீழே இறங்கி இருந்தான். அதனால் அவனால் உடனே தற்கொலை செய்ய முடியவில்லை.

7வது முறையும் இவன் பனையில் இருந்து இறங்கிய பிறகே முதல் மகள் வந்து பெண் குழந்தை பிறந்திருக்கும் செய்தியை சொன்னாள். இந்நிலையில் அவன் மனைவி 8வது முறை கருவுற்றாள். இம்முறையும் அவன் பனையை விட்டு இறங்கிய பிறகே அவன் மூத்த மகள் வந்து 8வதாக பெண் பிறந்த செய்தியை சொல்ல, மனம் வெறுத்து போன



அழகுராஜா

அவன் இனி நாம் உயிர் வாழவே கூடாது என முடிவு செய்து அருகில் இருந்த பாம்பு புற்றில் தன் கையை விட்டான். பாம்பு கடித்து விடும் நாம் உயிரை விட்டு விடலாம் என்பது அவன் எண்ணம்.

ஆனால் அம்பாளின் விருப்பம் வேறாக இருந்தது. அவன் புற்றின் உள்ளே கையை விட்டதும் கையில் ஏதோ சூடு பட்டது போல உணர்ந்தான். சூடு தாங்க முடியாமல் கையை வேகமாக வெளியே இழுத்து பார்க்கும் போது அவன் கையில் ஏதோ ஒன்று தக தகவென மின்னியது. புற்றில் இருந்த முதிர்ந்த நாகம் அவன் கையில் நாகரத்தினத்தை உமிழ்ந்து இருந்தது.

அது என்னவென்று அறியாத அவன் அதனை உடனே கொட்டாரத்திற்கு (அரண்மனைக்கு) கொண்டு சென்றான். அதை மஹாராஜாவிடம் கொடுத்தான். உடனே அதை பெற்று கொண்ட மகாராஜா அவரது குதிரையை அவிழ்த்து விட்டு அது எவ்வளவு தூரம் ஓடுகிறதோ அவ்வளவு இடத்தையும் அவன் பெயரில் எழுதி வைக்க சொன்னார். அவனும் மகிழ்ச்சியோடு அதை பெற்று கொண்டு வீட்டுக்கு சென்றான்.

அன்றிரவு மன்னரின் கனவில் ஒரு சின்னஞ் சிறு பெண் சென்று மன்னா ! இன்று காலை அரண்மனை தர்பாரில் உன்னிடம் ஒருவன் நாகரத்தினம் கொண்டு வந்து தந்தானே அதை நீ வாங்கி வைத்து கொண்டாயே ! அந்த நாகரத்தினத்தில் எனக்கு ஒரு மூக்குத்தியும், பில்லாக்கும் செய்து தர கூடாதா? என்று கேட்டு விட்டு மறைந்து விட்டாள்.

திருவிதாங்கூர் மன்னர் மறுநாள் காலையில் நம்பூதிரிகளை வரவழைத்து தான் இரவு கண்ட கனவை கூறி அந்த சிறு பெண் யார் என பிரசன்னம் வைத்து கண்டு பிடிக்கும் படி கூறினார். நம்பூதிரிகள் பிரசன்னம் வைத்து பார்க்கும் போது அது வேறு யாரும் அல்ல கன்னியாகுமரி பகவதி அம்மன் தான் என்பது தெரிய வந்தது.

நம்பூதிரிகள்



கூறியதை கேட்ட மன்னர் உடனடியாக தேவி கன்னியாகுமரி பகவதிக்கு நாகரத்தினத்தில் மூக்குத்தியும், பில்லாக்கும் செய்து கொடுத்தார். அது தான் இன்றும் அன்னை அணிந்து கொண்டு இருக்கிறாள். நாகரத்தினம் என்பதால் அது தக தகவென ஜொலிக்கும்.

கப்பலோட்டிகள் அம்பாளின் மூக்குத்தி வெளிச்சத்தை கலங்கரை விளக்க ஒளி என்று எண்ணியதால் கப்பல் திசை மாறி வந்த காரணத்தால் கோவிலின் கிழக்கு வாசல் அடைக்கப்பட்டு தெற்கு வாசல் வழியாக சென்று தான் தேவியை தரிசனம் செய்ய முடியும். அம்பாளின் கருணை முகத்தை கண்டால் நம்மால் அவள் சந்நிதியில் இருந்து திரும்பி வர மனம் வராது.

விளக்கொளியில் மூக்குத்தி ஜொலிக்க கன்னியாக, அன்னையாக எல்லோருக்கும் அருள் புரிந்து வருகிறாள்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182





# சிவபெருமானின் பாதம் பட்ட

## திருநிலை பெரியாண்டவர் ஆலயம்

செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் வட்டத்தில் உள்ள பாடல் பெற்ற சிவஸ்தலமான திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் ஆலயத்தி லிருந்து சுமார் 8 கி.மி. தொலைவில் திருநிலை கிராமம் உள்ளது. செங்கல்பட்டி லிருந்து கிழக்கே 14 கி.மி தொலைவிலும், திருப் போரூரிலிருந்து மேற்கே 12 கி.மி. தொலைவிலும் இத்தலம் உள்ளது.

**ஆலய வரலாறு:**

மனிதனாக வந்து மக்களை காக்கும் மகேசன் சிவபெருமானே மனிதவடிவம் தாங்கி உலக லாம் வலம் வந்து திருநிலையில் ஒருநிலையாய் தன்பாதத்தை பதித்து நின்று பெரியாண்டவர் என்ற நாமத்துடன் வீற்றிருந்து அருள்புரிகின்றார். இவ் வாலயத்தில் எம்பெருமானை சுற்றி 21 சிவகணங்கள் கைகூப்பி வணங்கி நிற்கும் காட்சி இவ்வாலயத்தை தவிர வேறு எங்கும் காணமுடியாத அரிய காட்சியாகும்.



வேலன்

முன் ஒரு காலத்தில் சுந்திர பத்திரன் என்ற அசுரன் சிவபெரு மானை வணங்கி பல அரிய வரங்கள் பெற்றான் அவற்றுள் முக்கியமானது அவனது மரணம் சிவசக்தி சொரூபமானவரால் மட்டுமே நிகழ வேண்டும். மேலும் அதற்கு முன்னால் எம்பெருமான் மனித அவதாரம் எடுத்து முடித்திருந்தால் மட்டுமே அவனை கொல்ல முடியும் என்ற சிக்கலான வரம் பெற்று இருந்தான்.

இதனால் இந்திரன் முதலான தேவர்களை விரட்டியடித்து அவர்களின் ஆட்சியை கைப்பற்றி பலவகையில் தொல்லை கொடுத்து வந்தான். அசுரனின் தொல்லை பொருக்க முடியாமல் சிவபெருமானிடம் தேவர்கள் முறையிட்டு காக்குமாறு வேண்டினர். தேவர்களை காக்கும் பொருட்டும் அசுரர்களை அழிக்கும் எண்ணத்துடன் சக்தியைக் காண எம்பெருமான் சென்றார்.

அசுரர்களின் அராஜகம் அதிக மாகி விட்டதால் அவர்களை உடனே அழித்து தேவர்களை காக்க வேண்டும், உடனே புறப்படு என்று கூறி நின்றார். ஐயன் கூறியதைக் கேளாமல் உமையவள் கண்மூடி தியானத்தில் ஆழ்ந்து அமைதி பூண்டு இருந்தார். தாயிடம் இருந்து பதில் வரததால் கோபம் கொண்ட




எம்பெருமான் என்னுடைய சொல் கேட்டு பதில் கூறாமல் இருக்கும் நீ மீண்டும் மானிட பெண்ணாக பிறப்பாய் என கண்கள் கனல் கக்க எச்சரித்தார்.

இவ்வார்த்தை கேட்டு தியாணத்தில் இருந்து விழித்தெழுந்த பார்வதிதேவி ஐயனை நோக்கி எம்மை மானிடராக பிறக்க சொல்லும் நீவிர், எம்மில் பாதியாக விளங்குபவர் தானே ஆகவே நீரும் ஒரு நாழிகை மனிதனாக பிறக்க வேண்டும் என சாபமிட்டார். உமை அவதாரத்தின் ஆழமும், அர்த்தமும் புரிந்து பேசினாள். இவ்வார்த்தையைக் கேட்ட ஐயனின் சித்தம் மெல்ல கலங்கியது. ஈசன் தன்நிலை மறந்து மனித அவதாரம் கொண்டார். உலகமெல்லாம் திக்கு திசையின்றி அலைந்து திரிந்து வந்தார். பரமனின் இந்நிலை கண்டு உமையவள் அச்சமுற்றாள். உலக ஜீவராசிகள் பயத்தில் நடுங்கின. தேவர்கள் முதலனோர் தாயிடம் வணங்கி பரமனை காத்து அருளுமாறு வேண்டினர்.

உடனே தாய் தன் சூலாயுதத்தை வீசி எறிந்தாள் அது பிரகாசமாய் பூமியில் ஓர் இடத்தில் நிலையாய் நின்றது. சூலாயுதம் வீழ்ந்த இடத்தில் இருந்து இருபத்தி ஓர் மண் உருண்டைகள் சிதறி சுற்றி விழ்ந்தன. பின் அவை ஒவ்வொன்றும் சிவ கணங்களாக மாறி சுற்றி ஐயனின் வருகைக்காக காத்து நின்றன. சூலாயுத ஒளியைக் கண்டு எம்பெருமான் திருநிலையாய் ஓர் இடத்தில் பாதம் பதித்து ஒருநிலையாய் நின்றார். பார்வதிதேவி அவ்விடத்திலேயே வணங்கி நின்றாள்.

ஒரு நாழிகை நேரமும் முடிய மனிதனாய் வந்தவர் சிவமாய் உறுமாறி தோன்றினார். மேலும் பெரிய மனிதனாக இவ்வுலகை வலம் வந்த ஆண்டவராகிய நீவிரே இன்று முதல் பெரியாண்டவர் என்று அழைக்கப்படுவீர் என உமையவள் கூறினாள்.

இவ்வார்தையை கேட்ட தேவர் முதலானோர் பெரியாண்டவா பெரியாண்டவா எனக் கூறி அழைத்து அவர் பாதத்தில் மலர் தூவி வாழ்த்தினர். சுற்றி நின்ற சிவகணங்களும் எம்பெருமான் நாமம் கூறி வணங்கி நின்றன.

ஒருநிலையில் திருநிலையாய் நிறுத்திய இவ்விடம் திருநிலை என அழைக்கப்படும் எனக் கூறிய ஐயன், மேலூம் உலகை காக்கும் நாயகி உமையவள் என்னை திருநிலையாய் நிலை கொண்டு ஆட்கொண்டதால் இன்று முதல் திருநிலைநாயகி எனஅழைக்கப்படுவாள் என்று வாழ்த்தினார். இவ்வார்த்தையைக் கேட்ட தேவர் முதலானோர் திருநிலை நாயகி என அழைத்து மகிழ்ந்து அவர் பொற்பாதத்தில் மலர் தூவி வாழ்த்தினர். சிவபெருமான் திருநிலையாய் ஒருநிலையில் தன்பாதம் பதித்து அருள்புரிந்த திருத்தலமே திருநிலையாகும்.

மேலும் பார்வதிதேவி தாயின் கருவின்றி பெரியமனிதனாக தோன்றி நிவீரே உலகை வலம் வந்தமையால் இவ்வுலகில் கருவின்றி வாடும் தம்பதியர்க்கு யார் இவ்விடத்தில் உன் நாமம் நினைக்கின்றார்களோ அவர்களுக்கு மழலைகளை வழங்கி அருள் புரியவேண்டும் என வேண்டினார். இறைவனும் அவ்வாறே நடைபெறும் என அருளினார்.

இன்றும் இவ்வாலயத்தின் அருகில் உள்ள சித்தாமிர்த குளத்தில் நீறாடி இறைவனை நினைத்து மனம் உருகி நெய் திபம் ஏற்றினால் எந்த ஒரு தம்பதியும் குழந்தைபேறு பெருவார்கள் என்பது இறையன்பர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக விளங்குகிறது.

மேலும் ஆண்டவனின் பாதம் பதித்த இடத்தில் ஜோதி வெளிப்பட்டு சுயம்பு லிங்கம் அமைந்துள்ளது. சூலாயுதம் வீழ்ந்த இடத்தில் இருந்து 21 மண் உருண்டைகள் சிதறி சுற்றி விழ்ந்து, பின் அவை ஒவ்வொன்றும் மண்ணில் இருந்து சிவகணங்களாக உருமாறி நின்றதை நினைவு கொள்ளும் விதமாக இவ்வாலயத்தில் 21 மண் உருண்டைகள் சிவகணங்களாக செய்து வைத்து





சுயம்பு லிங்கத்திற்கு அபிஷேகம் செய்வது போல் அவைகளுக்கும் செய்து ஆராதனை காட்டி அருள் பெருவது எங்கும் காணாத அதிசயம் ஆகும். நந்தி பகவானும் மனிதவடிவில் தோன்றி சிவனைபோல் அருள்வது இங்கு காணலாம்.

நெடுங்காலத்திற்கு முன்பு ஒரு தம்பதியினர் குழந்தைபேறு இல்லாமலும் வாழ வழிதெரியாமலும் மனவேதனையுடன் திருக்கழுக்குன்றம் வந்தடைந் தனர். அவர்கள் சிவபெருமானை மனதில் நினைத்து மனமுருக வேண்டி துதித்து வந்தனர். ஒருநாள் சிவபெருமான் அவர்கள் கனவில் தோன்றி நான் பெரியாண்டவர் அவதாரக் கோலத்தில் உலகை வலம் வந்தபோது என்னை நிலைகொள்ள செய்த இடமான திருநிலைக்கு சென்று வேண்டினால் உங்களுக்கு மழலை செல்வம் கிட்டும் என்றும் மேலும் உங்களுக்கு வழிகாட்டியாக ஒரு பன்றி அழைத்து செல்லும் என்று கூறி மறைந்தார்.

அவர்களும் அங்கு எப்படி செல்வது என்று தெரியாமல் விழித்தபொது திடீர் என்று அங்கு ஒரு பன்றி தோன்றி அவர்களுக்கு வழி காட்ட அவர்களும் இறைவன் கூறியவாறே அதன் பின்னே சென்றனர். அது ஒரு இடத்தில் ஆடாமல் அசையாமல் திருநிலையாய் நின்று பின் திடீர் என காணமல் மறைந்து. இறைவனே தங்களுக்கு பன்றி உருவில் வந்து வழிகாட்டியதாக நினைத்து வழிபட்டபோது அந்த இடம் வெட்டவெளியில் ஒளிமயமாய் திகழ்ந்து ஜோதி தரிசனம் தந்தது. அதைக் கண்ட அவர்கள் பெரியாண்டவர் நாமத்தை மனமுருக சொல்லி வழிபட்டனர். ஓர் ஆண்டுகழித்து ஆண்குழந்தை பெற்றதாக கோயில் தல வரலாறு கூறுகின்றது.

திருநிலையில் ஒருநிலையாய் நின்று அற் புதங்கள் நிகழ்த்தி அன்பர்களை காத்திடும் இறைவனாக, நெஞ்சாரத் தம்மை பணிந்து வணங்குவோர்க்கு வேண்டும் வரம் வழங்கி, இந்த புவணத்தை காத்து ரட்சிக்கும் எம்பெரு மானாக பெரியாண்டவர் விளங்குகிறார். இம் மை மறுமை எனும் பிறவிப் பெருந்துன்பம் போக்கி அடியாரை ஆட்கொள்ளும் நாயகனாக எம்பெரு மான் காட்சிதருகின்றார். அவரின் அற்புதங்கள் கணக்கில் அடங்கா.

மழலை இல்லா மங்கையரின் மனக்குறை களைந்து மழலைகளை உடன்வழங்கி,மனநலம் கண்டோர் வாழ்வில் நலவலம் வழங்கி, மண மாகதப் பெண்களுக்கு எளிதில் மணங்கூட்டி, ஏழை எளியோரின் வாழ்வை காத்து ரட்ச்சித்து, உழைத்து ஊர்காக்கும் உழவர்க்ளின் பயிர் வாழ மழைவளம் அளித்து, கொஞ்சித் தவழும் குழந்தைகளை அஞ்சாது காத்து,


● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

நாடிவரும் அடியார்கள் வாழ்வில் அஞ்ஞானம் நீக்கி மெய்ஞானம் வழங்கி மேன்மையான வாழ்வு தரும் இத் திருத்தலத்திற்கு வருகை தந்து பெரியாண்டவரின் பொற்பாதம் வணங்கி அவரின் திருவருளைப் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டுகின்றோம்.

ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் சிறப்பு வழிபாடுகளும் அர்ச்சனை, ஆராதனை நடைபெற்று வருகின்றன. பக்தர்களுக்கு அன்ன தானமும் வழங்கப்படுகின்றது.



ஆலய அமைப்பு:

எழில் நிறைந்த திருநிலை கிராமத்தில் வெட்டவெளியில் குடிகொண்டிருக்கும் இறைவன் ஆலயம் வடபுறம் குளக்கரையும், தென்புறம் ஏரிக்கரையும் கொண்டு கிழக்கு முகம் வாசல் கொண்டு அமைந்துள்ளது. நுழைவு வாயிலின் இடதுபுறம் பாலவிநாயகரும், வலது புறம் பாலமுருகப் பெருமானும் அருட்காட்சி தருகின்றனர்.

மூன்று நிலை கோபுரம்:

மூன்று நிலை கொண்டு உயர்ந்து நிற்கும் சிவபெருமான் குடியிருக்கும் இவ்வாலயம் மூன்று நிலை கோபுரத்துடன் அமைந்துள்ளது.

நுழைவு வாயிலின் இடதுபுறம் தலவிநாயகர் காட்சி தருகிறார். அவரைக் காணுகையில் நம் தடைகள் தகர்ந்து போகின்றன.

நுழைவு வாயிலின் வலதுபுறம் முருகப்பெருமான் ஆறுமுகம், பன்னிரெண்டு கைகளுடன் மயில் மீதமர்ந்த கோலத்தில் காட்சிதருகிறார்.

16 கால் மண்டப நுழைவு வாயிலில் உள்ளே நுழைந்தால் நேரே வீபூதி விநாயகரை தரிசனம் செய்யலாம். இவரை விபூதி கொண்டு நாமே அபிஷேகம் செய்தால் செல்வம், கல்வி, அறிவு பெறலாம். இது வேறு எங்கும் காணாத இவ்வாலயத்தின் சிறப்பம்சம். மண்டபத்தின் உள்ளே ஈசன் மனிதனாக உலகை வலம்வந்து ஒரு நிலையில் திருநிலையாய் நின்ற அற்புத கோலமும், அவரை ஒரு நிலையில் ஆட்கொண்ட அங்காளபரமேஸ்வரி ஈசனை வணங்கி நிற்கும் காட்சியும், இவர்கள் இருவரையும் திருமூலரும், இராமலிங்க அடிகளாரும் வணங்கி நிற்பதையும் காணலாம்.

பெரியாண்டவர் தோற்றத்துடன் காட்சி

சுயம்பு லிங்கத்தின் மேற்புறம் மனித உருவில் உலகை வலம் வந்த, மானிடம் காக்க வந்த முதற் கடவுளாக, அருள் தருவதில் முன்னிற்கும் மூர்த்தியாக, பக்தர்களைக் காத்திட ஒரு நிலையாய் திருநிலையில் நின்று பெரியாண்டவராக அமர்ந்து காட்சி தருகின்றார்.

அங்காள பரமேஸ்வரி

சுயம்புவின் வலதுபுறம் உலகை வலம் வந்த சிவ பெருமானை ஒருநிலையில் சூலாயுதத்தால் நிறுத்திய, அகங்காரம் நீக்கி அன்புதனை புகுத்திடும் அன்னையாக, அடியவர்களின் துயரை விரைவில் நீக்கிடும் வடிவாம் பிகையாக ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அன்பு பொங்க அருட் காட்சி தருகின்றார். அங்காள பரமேஸ்வரிக்கு நேர் எதிர்திசையில் சிவனும் சக்தியும் ஒன்று சேர்ந்து அர்த்தநாரீஸ்வரர் உருவில் அமர்ந்து காடசி தருகின்றனர்.

மற்ற மூர்த்திகள்

ஆலயத்தில் தட்சினாமூர்த்தி கோபுரத்தின் தெற்கு திசையில் அமைந்துள்ளார். பைரவர் கோபுரத்தின் வட திசையில் கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் காட்சி தருகின்றார்.

சிவ னும் சக்தியும் கால் பதித்து ஒருசேர நின்ற இவ்விடத்தில் சிவபாதமும், சக்தி பாதமும் தனித் தனியாக காட்சி தருவது தரிசிப்பவர் பாவத்தை போக்கவல்ல கண்கொள்ளா காட்சியாகும்.

சிவகணங்கள், நின்ற நிலையில் நந்தி

சுயம்பு லிங்கத்தைச் சுற்றி செவ்வக வடிவில் 21 சிவகணங்கள் இறைவனை வணங்கிநின்று காட்சிதரும் கோலம் வேறு எங்கும் காணமுடியாத காட்சியாகும். மேலும் சிவன் மனித ரூபத்தில் உலகை பெரியாண்டவராக அவதாரம்எடுத்து வலம் வந்தபோது, நந்தி பகவானும் அவ்வாறே கோலம் கொண்டு வலம் வந்து இறைவனின் முன்னால் மனித ரூபத்தில் எழுந்து அருள் பாலிக்கும் அரிய காட்சியை இங்கு காண முடியும்.

நாகாத்தம்மன் சன்னதி

ஆலயத்தின் வடபுறம் அமைந்துள்ள சித்தாமிர்த குளத்திற்கு செல்லும் வழியில் முன்னால் தனி சன்னதி கொண்டு விநாயகர், முருகர் இருபுறமும் இருக்க நாகாத்தம்மன் கிழக்கு நோக்கு அமர்ந்த கோலத்தில் அருட்காட்சி தருகிறாள்.

சித்தாமிர்த தீர்த்தம்

ஆலயத்தின் வடபுறம் அமைந்துள்ளசித்தாமிர்த



தீர்த்தத்தில் நீராடி இறைவனை வணங்கினால் சகலமும் கிட்டும் என்பது இறை அன்பர்களின் நம்பிக்கை.

சிவபெருமானின் பாதம் பட்ட தலம்.

குழந்தைப் பேறு அருளும் பரிகாரத் தலம்.

கலியுகத்தில் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஈசன் ஜோதி ரூபமாக காட்சி அளித்து நின்ற தலம்.

ஜோதியாக காட்சி தந்த வெட்ட வெளி இடத்தில் சுயம்புலிங்கம் பிரதிஷ்டை செய்து வணங்கி வழிபடும் தலம்.

லிங்கத்தின் வலதுபுறம் சிவசக்தி இருவரும் ஒருங்கே அமர்ந்து தெய்வீகக் காட்சி தருகின்ற தலம்.

பார்வதி தேவி திருநிலைநாயகி என அழைக்கப்படும் தலம்.

சக்தியின் சூலாயுதம் திருநிலையில் வீழ்ந்த போது 21 மண் உருண்டைகள் சிதறி வீழ்ந்து அவை சிவகணங்களாக மாறிய தலம்.

சுயம்பு லிங்கத்தைச் சுற்றி சிவகணங்கள் மண் உருக்கொண்டு இறைவனை பூஜிக்கும் தலம்.

குளம் மற்றும் ஏரி ஆகிய இரு கரைகளுக்கு மத்தியில் இயற்கை சூழலில் அமைந்துள்ள ஆலயம்.

இறைவனுக்கு பிடித்த உணவினை நாம் வீட்டிலேயே தயாரித்து இறைவனுக்கு வாழையிலையில் படையல் போட்டு நாமே தீபாராதனை காட்டுவது இந்த ஆலயத்தின் மற்றுமொரு சிறப்பாகும்.

நாம் வேண்டுதல் ஏதாவது இருப்பின் இறைவனை நினைத்து இங்குள்ள கல்லில் நம் உள்ளங்கையை வைத்து இறைவனை வேண்டி








னால் கை அதிர்வதை நாம் உணரலாம்.

குழந்தை வரம் இல்லாதவர்கள் ஒரு முறை அவசியம் சென்று வாருங்கள்.

ஆலயதொடர்புக்கு: திரு.ஏகசீலன் 98427 40957

தகவல் உதவி: திரு.நாராயணசாமி சென்னை.

**– வேலன், போன்: 9894836096**
**திருக்கழுக்குன்றம்.**

# எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்




உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக
வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

## இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும்
பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட இமெயில் முகவரிக்கு
உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

aanmeegamalar@gmail.com

# நினைத்ததை நிறைவேற்றும் ஸ்ரீ ராமஜெயம் வரலாறு

போரில் ராவணனை வீழ்த்தினார் ராமர். இந்த நல்ல செய்தியை சீதையிடம் யார் சென்றுக் கூறுவது என்று யோசிக்கும்பொழுது, நான் நீ என்று பலர் முன்வந்தார்கள்.

ஆனால் ராமரோ ஆஞ்சநேயர்தான் இதற்குச் சரியான ஆள் என்று அனுமனிடம் அந்த பொறுப்பை ஒப்படைத்தார்.

ராமரின் ஆணையை சிரமேற்கொண்டு சீதை யின் இருப்பிடத்திற்கு வந்த ஆஞ் சநேயருக்கு சந்தோஷ மிகுதியால் பேச முடியவில்லை.

கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. இதைக் கண்ட சீதைக்கோ ஏன் அனுமனின் கண் களில் கண்ணீர் என்ற கவலை.

இதை சட்டென்று புரிந்துகொண்ட அனுமன். சந்தோஷத்தில் வாய் பேச முடிய வில்லை என்றால் என்ன ராமர் வெற்றி பெற்ற நற்செய்தியை எழுதி காண்பிக் கலாமே என்று "ஸ்ரீ ராமஜெயம்" என்று மண்ணில் எழுத.

அதைப்படித்த சீதாப்பிராட்டியாரும் இராம னின் வெற்றிச் செய்தியறிந்து மகிழ்ந்தார்.

இந்த நிகழ்வுகாரணமாக ஸ்ரீஆஞ்சநேயரால் முதன் முதலில் ஸ்ரீ ராமஜெயம் எழுதப்பட்டதால், நாம் நினைக்கு காரியங்கள் வெற்றிபெற ஸ்ரீராமஜெயம் எழுதுவதை வழக்கமாகக் கொண்டனர் நமது முன்னோர்கள். அனுமனிடம் வேண்டிக்கொண்டு ஸ்ரீராமஜெயம் எழுதினால் நினைத் தது நிறைவேறும்.



# அழியாத சந்தோஷம் மன சாந்தியை தரவல்ல தேவதைகள்



இசைக்கு மயங்கி வருபவனாக இறைவனை சொல்லுவார்கள். இறைவனே இசை வடிவம் தான் என்றும் கூறுவார்களும் உண்டு. இசைக்கு இத்தகைய முக்கியத்துவம் கொடுக்கின்ற பாங்கு இன்று நேற்று வந்தது அல்ல. வேத காலம் தொடங்கிய வருகின்ற மரபாகும். அதனால் தான் நான்கு வேதங்களில் மூன்றாவதாக கருதப்படும் சாம வேதம் இசை வடிவமாகவே இருக்கிறது. இறைவனான திருமால் பகவத் கீதையில் தன்னை சாம கீதமாக இருப்பவனாக குறிப்பிடுகிறான். சிவ பெருமானும் சாமகீதப் பிரியன் என்று போற்றப்படுகிறார். சாம வேதத்தின் நாத அலைகள் மனதை மட்டுமல்ல உடலையும் உறுக்கும் சக்தி வாய்ந்தது. எங்கெல்லலாம் சாம வேதம் முறைப்படி ஓதப்படுகிறதோ அங்கெல்லாம் பயிர் பச்சைகள் செழிப்புடன் வளர்வதை அனுபவத்தில் காணலாம். இதனால் தான் சாம வேதத்தை சாமகானம், சாமகீதம், சாமபாடல் என்று இசையின் பெயரிட்டே அழைக்கிறார்கள்.

இந்த வேதத்தில் சம்ஹிதை பகுதிகளில் இருக்கும் பாடல்களில் எண்ணிக்கையை பற்றிய கருத்து பேதங்கள் இன்று வரை நீடித்து வருகிறது. சில சாமவேத உரையாசியர்கள் 1575 பாடல்கள் தான் உள்ளது என்று சொல்கிறார்கள். வேறு சிலரோ 1603 பாடல்கள் என்று சொல்லுகிறார்கள். பாடல்களின் எண்ணிக்கை கூடுவதாகவோ குறைவதாகவோ இருந்தாலும் அனைவரும் ஒரு பொது முடிவை ஒப்புக் கொள்கிறார்கள். அந்தபொது முடிவு என்னவென்றால் சாம வேதம் என்பது தனி ஒரு பிரிவாக இருந்தாலும் இதிலுள்ள பெரு வாரியான பாடல்கள் ரிக்

கடவுள் உருவாக்கிய மதம்

வேதத்திலிருந்தே எடுக்கபட்டிருக்கிறது என்பதாகும். சாம வேதத்திற்கென்று தனியாக கண்டெடுக்கப்பட்ட பாடல்கள் 99 பாடல்கள் தான் என்பது எல்லோரும் ஒத்துக் கொள்ளும் முடிவாகும்.

சாம வேதத்தை ஆறு வகையான சந்த வகைகளில் பாராயணம் செய்கிறார்கள். அந்த ஆறு வித ஒலி அமைப்பிற்கு ரதந்தரா, பிரகத், வைரூபா, வைராஜா, ஷிக்வாரா, ரைவாதா என்று பெயரிடப்பட்டுள்ளது. பாடும் போது ஒலிகளை ஏற்றியும் சமப்படுத்தியும் இறக்கியும் பாடுவதை பொருத்து இந்த ஆறு முறைகளும் பயன்படுத்த படுகிறது. சாமகானத்தை பாடுவதற்கு வேத காலத்தில் ஒரு நெறி பின்பற்றப்பட்டது. அதாவது சோமரசத்தை தயாரிக்கும் போது தான் இந்த வேதத்தை ஓத வேண்டும் என்பது அந்த நெறியாகும்.

சோமபானம் என்றால் என்ன? வேதங்களைப் பற்றியும் வேதகால மக்களைப் பற்றியும் பேச்சு எழும்பொழுதெல்லாம் சோம பானத்தை பற்றிய பேச்சு தானாக வந்துவிடுகிறது. நம்மில் நிறைய பேர் சோம பானம் என்பது ஆதிகால சாராயம் என்றே நம்புகிறோம். உண்மையில் சோமபானம் போதை தருகின்ற சாராய வகையை சார்ந்தது தானா அல்லது உடலுக்கு தெம்பூட்டக்கூடிய சக்தி மிக்க பானங்களின் ஒன்றோ என்பது பற்றி ஆராய்ச்சி செய்யவும் விடைகானவும் அனைவருக்கும் ஆவல் எழும்புவது இயற்கைதான். அந்த ஆவலை நிவர்த்தி செய்து கொள்ள வேதங்களை நுண்ணியமாக ஆராய்ந்த போது அது போதை தரும் பானம் தான் என்ற அதிர்ச்சியான உண்மை தெரியவந்தது. இதில் என்ன அதிர்ச்சி இருக்கிறது? சோம பானம் என்றாலே போதை வஸ்து என்று தானே நம்பிக் கொண்டிருக்கிறோம் அது அப்படி அல்ல என்று தெரிய வந்தால் அதிர்ச்சி ஏற்படலாம் இதில் ஒன்றுமே வியப்பு இல்லையே என்று சிலர் எண்ணக்கூடும்.

பொதுவாக நாம் பூஜைகள் போன்ற புனிதமான காரியங்களுக்கு மது மாமிசங்களை படையல் செய்வதையோ பயன்படுத்துவதையோ கீழ்தரமான தாகவே கருதி வருகிறோம். கிராம புற தேவதைகளான ஐயனார், வீரன் போன்றவர்களுக்கு சாராயம், சுருட்டு படைத்து வழிபடுவதை அனாகரீகம் என்றே கருதுகிறோம். நாம் இன்று கீழ்தரமாக எண்ணுவதும் அனாகரீகம் என்று கருதுவதும் ஒரு காலத்தில் வழிபாட்டின் ஒரு அங்கமாக இருந்திருக்கிறது. காலம் செல்ல செல்ல மக்களின் மனதும் அறிவும் வளர வளர வழிபாட்டு முறைகளில் பல வித மாறுபாடுகள் ஏற்பட்டு இருக்கிறது. இந்த உண்மையை சுலபமாக நாம் மறந்து விடுகிறோம். இன்று நாம் செய்கின்ற வழிபாடுதான் நாகரீகமானது வேதங்களின் அங்கிகாரம் பெற்றது என்று கருதிக் கொண்டு மாறுபட்ட வழிபாட்டு முறைகளை கேலி செய்து வருவது விந்தையிலும் விந்தை அல்லவா,



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

சோமன் என்ற வார்த்தை சந்திரனைகுறிக்கும். அதே போன்றே சோமபானம் என்ற வார்த்தையும் சந்திரனின் ரசம் என்ற அர்த்தத்திலேயே அழைக்கப்படுகிறது.

இதனால் இப்பானம் நேரிடையாக சந்திர கிரகணங்களை கிரகித்து உருவாக்கப்பட்டது என்ற பொருளை ஏற்றுக் கொள்ள முடியாது. சந்திரன் உதயமாகி நடுவானத்திற்கு வருகின்ற பொழுது இந்த பானம் தயாரிக்கப்படுவதினாலும் சோமக் கொடி என்ற மூலிகையின் வேர் பகுதியை பயன்படுத்த உருவாக்கப்படுவதினாலும் இதற்கு சோமபானம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. வேதங்களில் சோமபானம் தயாரிக்கும் முறை மிக அழகுடன் விவரிக்கப்பட்டுள்ளது.

சோமக் கொடிகள் செழித்து வளர்ந்திருக்கும் மலையடிவாரத்திற்கு சென்று அதன் வேர்பகுதிகள் சேகரிக்கப்படும் அப்படி சேகரிக்கப்பட்டவேர்கள் ஆடுகள் இழுக்க கூடிய அழகிய சிறு வண்டிகளில் வைத்து ஊர் புறத்திற்கு கொண்டுவரப்பட்டு நேர்த்தியான முறையில் குறிப்பிட்ட பகுதியில் அடுக்கிவைக்கப்படும். சோம பானத்தை சுலபமாக எல்லோரும் தயாரித்து விட முடியாது. அதை தயாரிப்பதற்கு 20லிருந்து 25வயது நிரம்பிய இளைஞர்கள் 12பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்கள் 12நாள் கடுமையான விரதம் இருக்கவேண்டும். முதல் மூன்று நாட்கள் ஒரு வேளை உணவு மட்டுமே அருந்த வேண்டும். அதை தொடர்ந்து வரும் ஆறு நாட்கள் ஒரு வேளை உணவையும் சமைக்காமல் பிச்சை எடுத்து உண்ண வேண்டும். கடைசி மூன்று நாட்கள் உணவு எதுவும் உட்கொள்ளாமல் சோம பானம் தயாரிக்க ஆரம்பிக்க வேண்டும். சோமச் செடிகளின்

தண்டுகளையும் இலைகளையும் விறகுகளாக்கி மண்பான்டத்தில் சுத்தமான நீரை நிரப்பி சோம வேர்களை அதில் வைத்து காய்ச்ச வேண்டும். இப்படி காய்ச்சும் பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட வேத விற்பன்னர்கள் சூழ்ந்து நின்று சாம வேதத்தை கானம் செய்வார்கள். வேத கானத்துடன் தயாரிக்கப்படும் சோமரசம் யாகங்களில் படைக்கப்பட்டு பங்கு பெற்ற அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கப்படும்.




சோமபானத்தை வேதகால மக்கள் யாகங்களின் போது மட்டுமே பயன்படுத்தினர். போதை தருகிறது என்பதற்காக மற்ற நேரங்களில் அது பயன்படுத்தப் படவில்லை. காரணம் என்னவென்றால் சோமபானம் தெய்வங்களுக்குய புனிதப் பொருளாக கருதப்பட்டது. சோமன் என்ற சந்திர தேவன் பிரளயம் ஏற்பட்டு உலகமெல்லாம் அழிந்த பிறகும் நீடித்து நிலைத்திருப்பவனாக கருதப்பட்டான் அப்படி நிலையான சந்திர தேவன் தருகின்ற சோமபானம் அதை அருந்துபவர்களையும் நிலையாக ஆரோக்கியத்துடன் வைத்திருக்கும் என்ற நம்பிக்கை அக்கால மக்களிடத்தில் ஆழமாக வேரூன்றி இருந்தது. அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே ஆரோக்கியம் தரும் சோமத்தை தயாரிக்கும் பொழுது ஆனந்தத்தை தரும் சாமவேதம் ஓதவேண்டும் என்ற நெறி நடைமுறையில் இருந்தது.

இனி சாம வேத கருத்துகளை சிறிது சிந்திப்போம். இந்த வேதத்தின் முதல் பாடல் அக்னி தேவனை ஆராதனை செய்கிறது. சோமரசம் உற்பத்தியாக அக்னி பெரும்பங்கு ஆற்றுகிறதல்லவா. அதனால் அவனுக்கு அர்ப்பணம் செய்யும் முறையிலேயே இப்பாடல் அமைந்திருக்கிறது. இந்த முதல் பாடல் 10 பகுதிகளாக உருவாக்கப்பட்டுள்ளது. பரத்வாஜ மகரிஷி 5 பகுதிகளையும் மேதாதிதி, உசானா, புருமீதா, வத்ச, வாமதேவர் ஆகியோர்கள் ஒவ்வொரு பகுதியையும் பாடி இருக்கிறார்கள். இனி அந்த பாடலின் முழுக்கருத்தையும் பார்ப்போம்.

அக்னியே இங்கே வா. உனக்காக ஆடம் பரமான விருந்தொன்று காத்திருக்கிறது. உனது பெருமைகளை ஒன்றன் பின் ஒன்றாக நாங்கள் அடிக்கி கொண்டே போகிறோம். எல்லா தெய்வங்களுக்கும் நீனே தூதுவனாக செயல் படுகிறாய். உன் மூலமாகத்தான் தெய்வங்கள் எல்லா விதமான ஆகுதிகளையும் எடுத்துக் கொள்கிறது. இத்தகைய தகுதி வாய்ந்த நீ எங்களை காக்க வேண்டும். புனிதமான தர்பை புல் மூலம் உனக்கு இருக்கை செய்யப்பட்டுள்ளது. அதில் வந்து நீ கம்பீரத்துடன் அமர்ந்துக் கொள். மனிதர்கள் வாழுகின்ற பூமியெங்கும் சடங்குகள் நடத்தப்படு கின்றன. அந்த சடங்கு களில் புனித மான நெருப்பே எப்பொழுதும் மூட்டப் படுகிறது. அந்த நெருப்பு அக்னி தேவனான உனது அழகிய வடிவமென்றோ உனது திவ்யமான நெருப்பு சரீரத்தில் தான் நாங்கள் எல்லா தேவர்களையும் தரிசனம் செய்கின்றோம்.

அக்னியே நீ தெய்வங்கள் அனைத்திற்கும் பிரதிநிதியாகிறாய். அதனால் செல்வங்கள் அனைத்திற்கும் நீயே அதிபதி. இந்த தெய்வீக திருச்சடங்கு குற்றமின்றி அமைய எங்களுக்கு துணை செய்.

எங்களை நோக்கி வரும் எல்லாவிதமான துன்பங்களையும் பகைவர்களையும் வதம்செய் வது நீதான். நாங்கள் பெற்றிருக்கும் செல்வங்க ளெல்லாம் உன்னுடையது தான். இப்படி அனைத்தையும் தரும் உன்னை துதிக்கவும் வணங்கவும் இந்த ஒரு பாடல் போதுமா போதாது அதனால் உன்னை வணங் கும் பாடல்கள் பெருகி






ஆன்மிகமலர்
ஆன்மிக விஷயங்களின்
முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில்
பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று
முழுவதுமாக பார்த்து
பயன் பெறுங்கள்...
ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை
Subscribe
like & share


கொண்டே போகிறது. ஒளிமயமான தேகத்துடன் வருகின்ற தேவா எங்களது துதிகள் அனைத்தும் உனக்கே அர்ப்பணம்.

அக்னியே புகழுக்கு தகுதி யானவனே நீயே எங்களது இனிய விருந் தினர். நம்பிக்கைக்குரிய நண்பன். அறிவை நாங்கள் அடையும் பாதையை எங்களுக்கு காட்டும் வழிகாட்டி நீ. அறிவுப் பாதையில் நாங்கள் சுகமாக பயணம் செய்ய குதிரைகள் பூட்டிய தேர்போல் நீ உதவுகிறாய் எங்களை சுற்றி கொடிய பகைவர்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் கண்களிலிருந்து வெறுப்பும் பொறாமையும் நிரம்பி வழிகிறது. அவர்களின் தாக்குதலிலிருந்து எங்களை பாதுகாவல் செய். உன்னை போற்றுவதில் உண்மையான சொற்களே பயன்படுகிறது. அவற்றில் எதற்காக வாய்மை இல்லாததை சேர்க்க வேண்டும். உனை போற்றும் உண்மைகள் எங்கள் இதய ஆழத்திலிருந்து ஊற்றெடுக்கிறது. அந்த ஊற்றின் உருவகமாக சோமபானம் இருக்கிறது. சோமரசத்தை அள்ளி குடித்து எங்களுக்கு துணை செய்ய துள்ளி குதித்துவா.

உனக்கு பிரியமானவர்கள் நாங்கள் தான். உன்னை புகழ்வதால் எங்களது இதய மாசுகள் அகன்று புனிதத்தை அடைகின்றன. எங்களது விருப்பங்களும் நிறைவேறுகின்றன. எங்கே நீ தூரத்திலிருந்தாலும் உன்னை அழைக்கும் எங்கள் குரல் அங்கேயும் செவிகளில் வந்து விழும். நீ தொலைவில் இருந்தாலும் சொர்க்கத்தில் இருந்தாலும் எங்கள் குரலுக்காக ஒரே பாய்ச்சலில் காட்டு. எல்லாத் துன்பங்களிலிருந்தும் எங்களை பாதுகாக்கும் அக்னி தேவனே! எங்கள் முன் நாங்கள் பார்க்கும் படி அன்புடன் வந்து காட்சி தா. எங்களுக்கு அறிவை கொடுத்து ஞானத்தை வளர்க்கும் பேராசான் நீ. எனவே எங்கள் அறிவுக்கனல் மூண்டெறிய எங்கள் முன் தோன்று.

இந்த பாடல் வரிகள் மூலம் வேதகால மக்கள் அழிந்து போகக் கூடிய உலக பொருட்களை மட்டும் தெய்வங்கள் தராது அதையும் தாண்டிய நிலையிலுள்ள அழியாத சந்தோஷத்தையும் மன சாந்தியையும் தரவல்ல அறிவையும் ஞானத்தையும் தேவதைகள் தரும் என்று நம்பியது தெளிவாகிறது.


யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

# உலகளாவிய நட்பு இல்லத்தில் தொடங்குகிறது

அன்பு குருதேவர் அருளுகிறார்: “நட்பு, இல்லத்தில் தொடங்கவேண்டும். உங்கள் குடும்பத்தில் ஒருவர் குறிப்பாக உங்களுடன் இணக்கத்துடன் இருந்தால் அந்த நபருடன் முதலில் உங்கள் நட்பை வளர்த்துக்கொள்ளுங்கள். பிறகு உங்களுக்கு அறிமுகமானவர்களில் அதே லட்சியங்களைகொண்ட எவருடனாவது நீங்கள் ஈர்க்கப்பட்டால், அந்த உறவினை வளர்த்துங்கள். சுயநலம் அல்லது பாலுணர்வு நிர்பந்தம் ஆகியவற்றின் அடிப்படையில் உதிக்கும் எல்லா ஆசைகளையும் அகற்றி விடுங்கள். தூய்மையான நட்பினைக் கொடுக்கும்பொழுது நீங்கள் இறைவனின் வழிகாட்டுதலைக் காண்பீர்கள். நல்ல மனிதர்களுடன் நட்பை வளர்த்துக்கொள்ளுங்கள். மேலும் எவ்வளவு அதிகம் தியானம் செய்கிறீர்களோ, அவ்வளவு அதிகம் கடந்த பிறவிகளின் நண்பர்களை அடையாளம் காண்பீர்கள். தியானமானது, “இன்னும் ஒருமுறை நண்பர்கள் ஆகப்போகிறவர்களைப் பற்றிய உறங்கும் நினைவுகளை” (ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் எழுதிய ஆன்மாவின் கீதங்களில் உள்ளவை) தட்டியெழுப்பச் செய்கிறது. தெய்வீகக் காட்சிகளில் நான் பார்த்திருந்த அநேக மனிதர்களை நான் பின்னர் சந்தித்தேன்; இங்கு அமெரிக்காவில் இந்த நாட்டிற்கு 1920 ல் முதன் முதலாக வந்துகொண்டிருந்தபொழுது கப்பலில் தெய்வீகக் காட்சியில் பார்த்தவர்களையெல்லாம், நான் கண்டுகொண்டேன்.”

“நட்பானது உலகம் தழுவிய ஒரு மாபெரும் சக்தி. நட்பிற்கான உங்களது அவா போதிய வலுவுள்ளதாக இருந்தால், உங்களுடன் ஆன்மீக ரீதியில் இசைந்திருக்கும் ஓர் அறிமுகமாகாத நபர், தென் துருவத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், நட்பின் காந்த விசையானது எப்படியாயினும் இருவரையும் ஒன்று சேர்க்கும். சுய நலத்தால் மட்டும்தான் நம்முள் இருக்கும் இந்த காந்த விசையை அழிக்க முடியும். எந்நேரமும் தன்னைப்பற்றியே நினைத்துக் கொண்டிருப்பவன் நட்பினை அழித்து விடுகிறான். அத்தகைய மனிதர்கள் நண்பர்களை ஈர்க்க முடியாது. ஏனென்றால் அவர்கள் உள்ளம் விரிந்து வாழ்வில் நன்மைகள் ஏற்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். “

மேலும் அவர் அருளுகிறார்: “மற்றவர்களை எவ்வாறு நேசிப்பது, பிறகு அம்மாதிரியான அன்பை எல்லோருக்கும் அளிப்பது ஆகியவற்றை நீங்கள் தெரிந்துகொள்வதற்காகத்தான் இறைவன் உங்களுக்கு ஒரு குடும்பத்தைக் கொடுத்துள்ளான். மனிதர்களை வெறும் மனித உறவு முறையில் மட்டும் நேசிக்காது, எல்லா மனித முகத்திரைகளுக்கும் பின்னால் இருப்பவனான இறைவன் என்ற அந்தப் பேரன்பிடமே அன்பு கொள்வதை நாம் பயிலத்தான் நமது அன்புக்குரியவர்கள் இறப்பு மற்றும் இதர சூழ்நிலைகளால் நம்மிடமிருந்து பிரிக்கப்டுகின்றனர். “ஒரு மனிதன், எல்லா தனிப்படுத்தப்பட்ட உயிர்களும், தானே பலவாக விரிந்துள்ள அந்த ஒன்றினுள் அடங்கியிருப்பதைக் காணும்பொழுது அவன் பிரம்மத்துடன் ஒன்றாகிறான். “(பகவத் கீதை அத் 13 ஸ்லோகம் 30)

“நட்பு என்பது உங்களுடைய அன்பை மனித உறவுகளின் பாரபட்சம்



இல்லாத இடத்தில் முதலீடு செய்வது என்று பொருள்படும். மணவாழ்வில் பாலுறவின் நிர்பந்தம் உள்ளது. குடும்ப வாழ்க்கையில் மரபு வழி உணர்வுகளில் நிர்பந்தம் உள்ளது. ஆனால் நட்புறவில் எந்த நிர்பந்தமும் இல்லை. நமது அன்பை நாம் எல்லோருக்கும் அளிப்போமாக. நமது கடந்த பிறவிகளின் நண்பர்களைச் சந்தித்து அவர்களுக்கு நமது நட்பை நிரூபிக்கவும், அதன் மூலம் இறுதியாக இறைவனது நட்பைப் புரிந்துகொண்டு மதிக்கவும் நாம் பிரார்த்திப்போமாக. அவனது எல்லாக் குழந்தைகளிடமும் நட்பார்வம் மூலம் நாம் ஒன்றுபடாவிடில், இறைவனுடன் நாம் ஒன்று படமாட்டோம். எனக்கு அன்னியர்களே இல்லை. என்ன ஓர் உயர்ந்த ஆனந்தம் மற்றும் இன்பமான நிலை! மிக மோசமான எதிரியும்கூட நான் அவனது நண்பனல்ல என்று என்னை நினைக்கவைக்க முடியாது! அந்த ஞானம் வரும்பொழுது, நீங்கள் எல்லாரிடமும் அன்பாக இருக்கிறீர்கள். ஒவ்வொருவரும் தெய்வத்தந்தையின் குழந்தைகள் என்பதைக் காண்கிறீர்கள். மேலும் அனைவருக்காவும் நீங்கள் உணரும் அன்பு என்றும் அழிவதில்லை. அது நண்பர்களின் அன்பில் இறைவனின் தெய்வீக அன்பை நீங்கள் அறியும்வரையில் அதிகரித்துக்கொண்டு வளர்கிறது" என்கிறார் குருதேவர்.

நட்பு என்பது உலகளாவியது ; அது இல்லத்தில் தொடங்குகிறது என்று அன்பு குருதேவர் கூறுகிறார். இது சம்பந்தமாக பாரதத்தில் விதுரரின் உரையை இங்கே குறிப்பிடவிழைகின்றேன். அவர் கூறுகிறார்: "சம்சார வாழ்க்கை வாழ்ந்துகொண்டு தன்னுடைய காரியத்தில் முயற்சி இல்லாமல் இருப்பவன், சன்னியாசியாக வாழ்க்கை மேற்கொண்ட பிறகு தன்னுடைய காரியத்திலேயே கவனமாக இருப்பவன் ஆகிய இரண்டு பேரும் என்றுமே புகழ்பெறமாட்டார்கள். நாம் நியாயமாகப் பெற்ற பொருளிலிருந்து தன்னால் இயன்றவற்றை கொடுக்கத்தகாதவனுக்குக் கொடுப்பது; கொடுக்க வேண்டியவனுக்குக் கொடுக்காமலிருப்பது ஆகிய இரண்டுமே குற்றங்கள். தானம் செய்யாத பணக்காரன்; முயற்சி இல்லாத ஏழை இருவருமே பயனற்றவர்கள். இரண்டு பேர் நேராகச் சொர்க்கம் செல்கின்றனர். ஒருவன் யோகத்துடன்கூடிய சன்னியாசி; மற்றொருவன் போரில் புறமுதுகு காட்டாமல் போரிட்டு உயிரிழந்தவன். இரண்டாகிய விஷயங்களைச் சொன்னேன்."

"அடுத்து ஓர் அரசன், ராஜ்ஜிய காரியங்களை யாரிடத்தில் ஆலோசனை செய்யலாம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். "நான்கு விதமான மனிதர்களிடம் அரசன் ஆலோசனை செய்யக்கூடாது. அவையாவன: அறிவில் குறைந்தவர்கள், விரைவில் செய்து முடிக்க வேண்டிய காரியத்தில் தாமதம் செய்பவர்கள், சோம்பல் உடையவர்கள், முகஸ்துதி செய்து பிழைக்க நினைப்பவர்கள் ஆகியவர்களிடம் அரசன் ஆலோசனை செய்வது நல்லதல்ல. அரசனே! உன்னப்போன்ற செல்வந்தர்கள் வீட்டில் நான்கு விதமான மனிதர்கள் இருப்பது நல்லது. ஒன்று, உன்னுடைய வயது முதிர்ந்த உறவினர்; இரண்டு, செல்வந்தனாக வாழ்ந்து வீழ்ச்சி அடைந்துள்ள உறவினர்; மூன்று, ஏழையாக இருக்கிற சினேகிதன்; நான்கு, மகனைப் பெறாத சகோதரி இவர்களில் முதிர்ந்த வயதுடைய உறவினர், வீட்டிலுள்ள அனைவருக்குமே தர்மங்களை உபதேசிப்பார்; செல்வந்தனாக இருந்து வீழ்ந்து விட்ட உறவினர், குழந்தைகளுக்கு நல்ல பழக்கங்களைச்

112
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக





மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்

சொல்லிக்கொடுப்பார்; ஏழையாக இருக்கிற நண்பர் பொதுவாக நல்லதையே செய்வார்; மகன் இல்லாத சகோதரி, குடும்பத்தின் செல்வத்தைக் காப்பாற்றிக் கொடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பாள்.

அடுத்து பூஜிக்கத்தகுந்தவர்கள். தேவர்கள் முன்னோர்கள், சக மனிதர்கள், சன்னியாசிகள், விருந்தாளிகள் ஆகிய ஐந்து வகையான மனிதர்களை எப்பொழுதும் பூஜிக்கிறவன் புகழ் பெறுகிறான். ஐந்து இந்திரியங்களினால் உணரக்கூடிய விஷயங்கள் ஒன்றில் மனிதன் அதிகம் பற்று வைத்து விட்டால் அப்பொழுது அவனுடைய அறிவு ஓட்டைப் பாத்திரத்திலிருந்து தண்ணீர் ஒழுகுவது போல் ஒழுகிவிடும்.

அடுத்து ஆறு குற்றங்களை மனிதன் அகற்ற வேண்டும். அதிக தூக்கம், சோம்பல், அச்சம், மற்றவர்கள் மீது கோபம், முயற்சியின்மை, விரைந்து செயல்படாமை, ஆகிய இந்தக் குற்றங்கள் செல்வத்தைத் தடுக்கும். அடுத்து, ஆறு குணங்களை மனிதன் எப்பாடுபட்டாவது தன்னிடத்தில் இருத்திக்கொள்ள வேண்டும். அவை, உண்மையே பேசுவது, மற்றவர்களுக்கு உதவுவது, சோம்பல் இல்லாமலிருப்பது, பொறாமை இன்றி வாழ்வது, துணிவு, பொறுமை என்பவையாகும். செல்வத்தின் வரவு நோயில்லாத வாழ்க்கை, அன்புள்ள மனைவி, அமைதி நிரம்பிய இல்லம், தன் சொல் கேட்கும் மகன், பொருளை ஈட்டக்கூடிய கல்வி, இவை எப்பொழுதும் இன்பத்தைக் கொடுக்கும். ஆசை, கோபம் கஞ்சத்தனம், மதிமயக்கம், மனவெறி, பொறாமை ஆகிய ஆறு கெட்ட குணங்களை ஒதுக்கியவன் இந்திரியங்களை வென்றவனாகிறான். அவனுக்குப் பாவத்துடன் தொடர்பு ஏற்படுவதே கிடையாது. ஆறு விதமானவர்கள் வேறு வகையான ஆறு பேரை மரியாதையில்லாமல் நடத்துகிறார்கள். சீடர்கள், ஆசாரியனை மரியாதையில்லாமல் நடத்தும் காலம் வருகிறது. மனைவியை அடைந்த மனிதன், தன் தாயை அவமதிக்கிறான். ஆசை நீங்கின மனிதன், தன் ஆசையை தணித்த பெண்ணை அவமதிக்கிறான். பயனை அடைந்துவிட்ட மனிதன், உதவி செய்த மனிதனை அவமதிக்கிறான்; வியாதி நீங்கின மனிதன் அந்த வியாதியை நீக்கிய வைத்தியனை அவமதிக்கிறான். கரையை அடைந்துவிட்ட மனிதன், கரை சேர உதவிய தோணியை அவமதிக்கிறான். இது உலக இயல்பு. நோயற்ற உடல், கடனில்லாத வாழ்க்கை, வேறு தேசத்தில் சென்று வசிக்க வேண்டிய அவசியமின்மை, நல்ல மனிதர்களுடன் சேர்க்கை, தனது முயற்சியால் கிடைக்கிற செல்வம், பயமற்ற வாழ்க்கை ஆகிய ஆறும் என்றுமே சுகத்தை அளிப்பவை. பொறாமை உடையவன் அருவெறுப்பாக நடந்து கொள்பவன், எதிலும் திருப்தி அடையாதவன், காரணமில்லாமல் கோபம் கொள்பவன் எப்பொழுதும் பிறர்மேல் சந்தேகப்படுபவன் மற்றவர்களுடைய வாழ்க்கையைக் கெடுத்துத்

> "
>
> **நான்கு விதமான மனிதர்களிடம் அரசன் ஆலோசனை செய்யக்கூடாது.**
> **1.அறிவில் குறைந்தவர்கள்,**
> **2.விரைவில் செய்து முடிக்க வேண்டிய காரியத்தில் தாமதம் செய்பவர்கள்,**
> **3.சோம்பல் உடையவர்கள்,**
> **4.முகஸ்துதி செய்து பிழைக்க நினைப்பவர்கள்**
> **இவர்களிடம் ஆலோசனை செய்வது நல்லதல்ல.**



www.aanmeegamalar.com

தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறவன் ஆகியோர்கள் எந்நாளும் அமைதி பெறுவதில்லை.”

அடுத்து ஏழு குற்றங்களை அரசன் விலக்கியே வைக்க வேண்டும். “பெண்கள், சூதாட்டம், வேட்டை, மதுபானம், மிகவும் கடுமையான சொற்களைப் பேசுவது, மிகவும் கடுமையான தண்டனைகளை அளிப்பது, பொருளை வீணாகச் செலவிடுவது ஆகிய ஏழு குற்றங்களும் தன்னை நன்றாக ஸ்திரப்படுத்திக்கொண்டுள்ள அரசனைக்கூட அழிக்கும் சக்தி உடையவை.”



குருப்ரியா

ஒரு மனிதனிடம் எட்டு குணங்கள் இருந்தால் அவன் புகழ்பெற்று விளங்குவான். அவையாவன:

“அறிவு, நல்ல குலத்தில் பிறப்பு, அடக்கம் உடைமை, நல்ல கல்வி, வீரம், அளவறிந்துப் பேசுவது தன்னுடைய சக்திக்குத் தக்கபடி தர்மம் செய்வது, செய்நன்றி மறவாமல் இருப்பது ஆகிய குணங்கள் மனிதனை உயரச் செய்கினறன. ஒரு மனிதன் சுகமாக வாழ்வதற்கு அவனுக்கு எட்டு விஷயங்கள் தேவை. அவை, நல்ல நண்பர்கள், நல்ல செல்வம், மகனுடைய அரவணைப்பு, அன்புள்ள மனைவி, பத்தினியை பிரியாமல் வாழ்வது, தன் சுற்றத்தார்களுடைய உயர்வு, மனதில் விரும்பிய பொருளை அடைவது, ஜனசமூகத்தில் மரியாதை ஆகியவை ஒரு மனிதனுக்கு அமைந்து விட்டால் அவன் குறைவில்லாத சுகத்தை அனுபவிப்பான். “ இவ்வாறு விதுரர் கூறியுள்ளார்.

இவையெல்லாமே அதாவது நல்ல குணங்கள் உலகளாவிய அன்பு அல்லது நட்பு இறை அன்பில் கலந்துள்ளது. அது இல்லத்திலுள்ள உறவினர்களிடத்திலிருந்து ஆரம்பமாகிறது. விதுரர் கூறியுள்ளவற்றைச் சரியாக கடைபிடித்தால் குருதேவர் கூறியுள்ளவாறான உலகளாவிய நட்பை உருவாக்கி வளர்க்கலாம். இறை இருப்பை உணர்ந்தவர்களிடம் அல்லது இறைவனை உணர்ந்தவர்களை இந்த குணங்கள் தழுவிக்கொண்டிருக்கும். அதைத்தான் குருதேவர் கூறுகிறார்.

தியானத்தால் இறைவனைத் தேடிக் கண்டுபிடித்தவர்களுக்குக் கிடைக்காத அன்பும் நட்பும் எல்லாயிடத்திலும் கிடைக்கும் என்கிறார் குருதேவர். அதனால் மனிதனின் உயர்ந்த நோக்கமான இறைவனின் தேடுதலை மேற்கொண்டு இறைவனைக் கண்டு பிடித்தால் தீய குணங்கள் மனிதனை விட்டு விலகும். பின்னர் உலகத்திலுள்ள அனைவரும் நண்பர்களாகிவிடுவர்.!

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

# நமஸ்காரத்தின் வகைகள்

1. **பஞ்சாங்க நமஸ்காரம்:** இரு கைகள், இரு முழங்கால்கள், தலை ஆகிய ஐந்தும் நிலத்தில் பட வணங்குதல் பஞ்சாங்க நமஸ்காரம் எனப்படும்.
2. **ஏகாந்த நமஸ்காரம்:** தலை மட்டும் குனிந்து வணங்குதல் ஏகாந்த நமஸ்காரம் எனப்படும்.
3. **திரிக்க நமஸ்காரம்:** தலைமேல் இருகரம் கூப்பி வணங்குதல் திரியங்க நமஸ்காரம் எனப்படும்.
4. **சாஷ்டாங்க நமஸ்காரம்:** இரு கைகள், மார்பு, இரு முழங்கால்கள் பூமியில் பட வணங்குதல் சாஷ்டாங்க நமஸ்காரம் எனப்படும்.
5. **அஷ்டாங்க நமஸ்காரம்:** தலை, இரு கைகள், இரு செவிகள், இரு முழங்கால்கள், மார்பு இவை அனைத்தும் பூமியில் படும்படி வணங்குதல் அஷ்டாங்க நமஸ்காரம் எனப்படும்




# நம்ம ஊரு கோவில்

**உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.**

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

**பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**

இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com
aanmeegamalar1@gmail.com



# பசுவிடம் வாசம்புரியும் மகாலட்சுமி, கங்கை

நம் பாரத தேசத்தில், பண்டை காலம் முதலே"பசுக்களை" காமதேனு, என்றும், கோமாதா, என்றும் அழைத்து போற்றி பூஜித்து வருக்கிறோம்.

பசுவானவள், பரமேஸ்வரனுக்கு தாயாகவும், வசுக்களுக்கு பெண்ணாகவும், ஆதித்தியர்களுக்கு சகோதரியாகவும் நாபியில் அமிர்தத்தை வைத்து கொண்டவளாகவும் உள்ளாள்.

இதனால் பசுக்களை அடிக்கவோ, விரட்டவோ, கூடாது பாதுகாத்து பூஜிக்க வேண்டும் "பிரம்மாவின்" படைப்பில் உலகின் முதல் படைப்பே, பசுக்கள்தான் அசுரர்களும், தேவர்களும் "பாற்கடலை" கடைந்த போது பாற்கடலில் இருந்து "ஐந்து" பசுக்களை வெளிப்படுத்தினார் பிரம்மா.

அவை,

1. நந்தா,
2. சுசீலை,
3. சுமனை,
4. சுரபி,
5. பத்திரை

ஆகிய சக்திகளாக வெளிவந்து பூலோகத்தில் பசுக்களாக உள்ளன. இப்படி வெளி கொண்டு வந்த பசுவின் உடலில், பதினான்கு உலகையும், முப்பத்து முக்கோடி தேவர்களையும் இருக்க செய்தார் பிரம்மன்.

பசுவின் உடலெங்கும் இறைவன் வியாபித்து உள்ளார் இப்படி பசுவின் உடம்பில் இடம் ஒதுக்கும் போது யார்? யாரெல்லாம் முதலில் வந்தார்களோ, அவர்களுக்கு முன்னுரிமை கிடைத்தது ஆனால் "மஹாலக்ஷ்மியும்","கங்கையும்" கடைசியாக வந்ததால் அவர்களுக்கு, பிரம்மனால் இடம் ஒதுக்க முடியவில்லை, அப்போது அவர்கள் இருவரும் பசுவின் உடம்பில் எங்காவது ஒரு மூலையில்



இடம் வேண்டும் என்று வருந்தி கேட்க, பசுவின் உடம்பிலிருந்து வெளி வரும், "சாணம்," "கோமூத்ரம்" ஆகிய இரண்டும் யாருக்கும் சொந்த மில் லை, எனவே நீங்கள் இரு வரும் விரும்பினால், அங்கு வாசம் புரியலாம் என்றார்.



அதன்படி பசுவின் பின்பகுதி யில் "மஹா லக்ஷ்மியும்" "கங்கையும்" உள்ளார் கள் என்று நமது சாஸ்திரங் கள் கூறு கிறது பசுவின், சாணமும், கோமூத்ரமும், சகல பாவங்களையும் போக்கும் என்று நம்பப்படுகிறது சாஸ்திரமும் அப்படித்தான் கூறுகிறது!

"கோ" பூஜை, அதாவது பசுவுக்கு பூஜை செய்து வணங்கினால், சகல சௌபாக்கிய மும் கிட்டும் என்பது இந்து மத நம்பிக்கை ஆகும்.

"கோ" பூஜை செய்யும்போது சொல்ல வேண் டிய ஸ்லோகம்

நமோ தேவ்யை மஹா
தேவ்யை சீரப்பை ச நமோ நம
கவாம் பீஜஸ்வ ரூபாயை நமஸ்தே
ஜகதாம்பிகே
நமோ ராதாப் பிரியாயஸ பத்மாம்
சானய நமோ நம
நம கிருஷ்ணப் பிரியாயை
கவாம் மாந்ரே நமோ நம
கல்ப விருக்ஸ்வ ரூபாயை
ஸ்ர்வேஷாம் ஸ்ந்ததம் பரம்
ஸ்ரீதாயை ப்ரஸன்னாயை
கோப தாயை நமோ நம
சுபதாயை ப்ரஸன்னாயை
கோப தாயை நமோ நம
யசோதாயை கீர்த்தி தாயை
தர்மக்ஞாயை நமோ நம
இதம் ஸ்தோத்ரம்
மஹத் புண்யம் பக்தி
யுக் தக்ச ய படேத்
ஸ்கோ மான் தவான்ச் சைவ
கீர்த்திமான்
புத்திரவான் பவேத்

என்று ஸ்லோகம் சொல்லி பூஜிக்க வேண்டும்

## கோ பூஜை செய்யும் பலன்கள்

❖ பணக்கஷ்டம் தீரும்,
❖ திருமணம் கூடும்,
❖ குழந்தை பலன் கிட்டும்,





மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

❖ தீய சக்திகள் விலகும்,

❖ முன்னோர்கள் ஆசி கிட்டும்,

❖ முற்பிறப்பில் செய்த பாவங்கள் நீங்கும்,

❖ உடலில் உள்ள நோய்கள் விலகும்,

❖ வழக்குகளில் வெற்றி கிட்டும்,

ஆம் அனைத்து பலன்களும் கிட்டும் கன்றுடன் கூடிய பசு, பூஜைக்கு சிறப்பாகும் வெள்ளிக்கிழமைகளிலும் பௌர்ணமி நாட்களிலும் பூஜை செய்வது சிறப்பு பசுவையும், கன்றையும் குளிப்பாட்டி, மஞ்சள் மஞ்சள் பூசி, குங்குமம் வைத்து, மாலைகள் அணிவித்து பசுவின் உடம்புக்கு புடவை, அல்லது ரவிக்கை துணி போட்டு, பூஜிக்க வேண்டும்.



கே.ஆர்.ஜி.ஸ்ரீராமன்

பசுவின் பால் தாய்பாலுக்கு நிகரானது ஆகும் பசுக்களை பாதுகாக்க வேண்டும் கோயில்களில் "பசு மடம்" அமைத்து பாதுகாக்க வேண்டும் நம் முன்னோர்கள் பண்டை காலம் முதலே பூஜித்து வருகிறார்கள்.

பசுவின் உடலில் அருள் புரியும் தெய்வங்கள் இடம் பெற்றுள்ள இடங்கள்

1 பசுவின் மத்திய முகத்தில் – சிவன் இடம் பெற்றுள்ளார்
2 வலது கண்ணில் – சூரியன்
3 இடது கண்ணில் – சந்திரன்
4 வலது மூக்கில் – முருகன்
5 இடது மூக்கில் – கணேசர்
6 காதுகளில் – அஸ்வனி குமாரர்கள்
7 கழுத்தின் மேற் புறம் – ராகு
8 கழுத்தின் கீழ் புறம் – கேது
9 கொண்டை பகுதி – பிரம்மா
10 முன் கால்களின் மேல் புறம் – விஷ்ணு, சரஸ்வதி
11 முன் வலது கால் – பைரவர்
12 முன் இடது கால் – ஹனுமார்
13 பின்னங்கால்கள் – ப்ராசர், விஷ்வாமித்திரர்
14 பின்னங்காகளின் மேல் பகுதி – நாரதர், வசிஷ்டர்
15 பிட்டம் கீழ் புறம் – கங்கை
16 பிட்டம் மேல்புறம் – லட்சுமி
17 முதுகுபுறம் – பரத்வாஜர், குபேரர், வருணன், அக்னீ
18 வயிற்று பகுதி – ஜனக குமாரர்கள், பூமாதேவி
19 வால் மேல் பகுதி – நாகராஜர்
20 வால் கீழ் பகுதி – ஸ்ரீமானார்
21 வலது கொம்பு – வீமன்
22 இடது கொம்பு – இந்திரன்
23 முன் வலது கால் கொளம்பு – விந்திய மலை
24 முன் இடது கால் கொளம்பு – இமயமலை
25 பின் வலது கால் கொளம்பு – மந்திரமலை
26 பின் இடது கால் கொளம்பு – த்ரோன மலை
27 பால் மடி – அமுத கடல்

இப்படி உடலெங்கும் வியாபித்துள்ள பசுக் களை போற்றி வணங்குவோம்.

கே.ஆர்.ஜி. ஸ்ரீராமன்,
பெங்களூரு 77.
தொடர்பு எண்: 99724 66443



## நரசிம்மரின் சிறப்பு

❖ வாடபல்லி தலத்தில் உள்ள நரசிம்மரின் மூக்குக்கு எதிரில் ஒரு தீபம் ஏற்றப்படும். அந்த தீபம் காற்றில் அசைவது போல அசை யும், நரசிம்மரின் மூச்சுக் காற்று பட்டு அந்த தீபம் அசைவதாகக் கருதப்படுகிறது. அதே சமயத்தில் நரசிம்மரின் கால் பகுதியில் ஏற்றப்படும் தீபம் ஆடாமல் அசையாமல் நின்று எரியும்.

❖ ஆந்திராவில் நரசிம்மருக்கு நிறைய கோவில் இருக்கிறது. சிம்ஹசலம் கோவிலில் மூலவரின் உக்கிரத்தை குறைக்க வருடம் முழுவதும் சிலையின் மீது சந்தனம் பூசி மூடி வைத்திருப்பார்கள். வருடத்தில் ஒரு நாள் மூலவரை சந்தனம் இல்லாமல் பார்க்க முடியும்.

❖ மங்களகிரி கோவிலில் உக்கிரத்தை குறைக்க பானகம் ஊற்றி கொண்டே இருப்பார்கள்.

# ஆஞ்சநேயர் சிரஞ்சீவியாக மாறியது எவ்வாறு தெரியுமா?

இந்திரனால் தாக்கப்பட்டு உயிரிழுந்ததுபோல் கிடந்ததைக் கண்டு வருந்திய வாயு பகவான் அந்தக் குழந்தையைத் தனது மடியில் கிடத்திய வாறு தனது இயக்கத்தை நிறுத்திவிட்டார்.

வாயுவின் இயக்கம் இல்லாததால், அனைத்து ஜீவராசிகளும் துன்பப்பட்டனர். இதற்கு தேவர் களும் கந்தர்வர்களும்கூட விதிவிலக்கல்ல.

எனவே, அனைவரும் பிரம்மாவிடம் சென்று முறையிட அவர் அனைவரையும் அழைத்துக் கொண்டு வாயு பகவானிடம் வந்தார்.

இறந்துகிடந்த குழந்தையைக் கண்டு, பரிதாப மும் இரக்கமும் கொண்ட பிரம்மா தனது கரத்தால் அதைத் தடவிக் கொடுக்கவும், அனுமன் மீண்டு எழுந்தார்.

பிரம்மா அனைத்து தேவர்களையும் நோக்கி, 'ராவணன் முதலிய அரக்கர்களால் உங்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தைத் தீர்க்க இந்தக் குழந்தையால்தான், முடியும். அதனால் இவனுக்கு வேண்டிய அளவு நல்ல வரமளியுங்கள். அதன் மூலம் வாயு பகவானும் திருப்தி அடைவார்' என்று சொன்னார்.

இதன்பின்னர் சூரியன், தனது ஒளியில் 100ல் ஒரு பங்கை ஆஞ்சநேயருக்கு அருளினார். மேலும், தானே அனுமனுக்கு வேதங்கள், சாஸ் திரங்கள் அனைத்தையும் போதித்து, கல்வியில் சிறந்தவனாகச் செய்வதாக ஒப்புக்கொண்டார்.

வருணன், காற்றாலோ, நீராலோ அவருக்கு மரணம் ஏற்படாது என்றார்.

யமதர்மன், யம தண்டத்திலிருந்தும் நோய் களினி ன்றும் அனுமன் பாதிக்கப்பட மாட்டார் என வரமருளினார்.

குபேரன், அனுமன் யுத்தத்தில் சோர்வே அடைய மாட்டார் என்றார்.

சிவபெருமான், தனது அஸ்திரங்களினாலோ தனது கரங்களினாலோ மரணம் ஏற்படாது என் றார்.

விஸ்வகர்மா, தன்னால் இதுவரை செய்யப் பட்ட ஆயுதங்களாலோ, இனிமேல் தான் செய்யும் ஆயுதங்களாலோ ஆஞ்சநேயர் பாதிக்கப் படமாட்டார் என்றார்.

பிரம்மதேவர், ஆஞ்சநேயர் சிரஞ்சீவியாக இருப்பார் என்றும், பிராமணர்களால் சாபம் அளிக்கப்பட மாட்டார் என்றும் அருளினார். மேலும், அனுமன் தான் விரும்பிய வடிவம் எடுக்கவும், ஒருவரிடமும் பயமோ, யுத்தத்தில் தோல்வியோ அடைய மாட்டார். நினைத்த இடத்துக்கு நினைத்த வேகத்தில் அவரால் செல்ல முடியும் என்றும் வரமளித்தார்.

இந்த வரங்களினால் திருப்தியுற்ற வாயு பகவான் தனது இயக்கத்தைத் தொடங்கினார்....

இந்த வரங்களால் ஆஞ்சநேயர் என்றும் சிரஞ் சீவியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.



# வரலட்சுமி விரதம்

சுமங்கலி பெண்களால் மிகவும் பக்தியுடன் கடைப்பிடிக்கப்படுவது வரலட்சுமி விரதம். இந்த வர லட்சுமி விரதத்தை கடைப்பிடிக்கும் முறை எப்படி வந்தது என்றும் அதன் புராண கதையையும் பற்றி இங்கு தெரிந்துக் கொள்வோம் வாங்க...

எந்த ஒரு விரதமாக இருந்தாலும் அதன் வரலாறு, புராண கதைகளை தெரிந்து கொண்டு இருந்தால் அதனால் கிடைக்கக் கூடிய பலன் மிகவும் அதிகமாகும். அந்த வகையில் இன்று வரலட்சுமி விரதம் எப்படி வந்தது, அதன் புராணக்கதை என்ன என்பதை பற்றி தெரிந்துக் கொள்ளலாம்.



இந்த வரலட்சுமி விரதம் என்பது ஒரு முனிவராலோ அல்லது தேவர்களாலோ சொல்லப்பட்டது அல்ல. எந்த தெய்வத்தை நோக்கி நாம் விரதமிருக்கின்றோமோ, அந்த தெய்வத்தாலேயே மனிதர்களுக்கு சொல்லப் பட்ட விரதம்தான் வரலட்சுமி நோம்பு விரதம்.

அதுமட்டுமல்லாமல் தெய்வத்தை நம் வீட்டி லேயே உருவாக்கி தன் முன் வைத்து விரதம் அனுசரிப்பதும் இந்த வரலட்சுமி நோம்பில்தான்.

## வரலட்சுமி விரதத்தின் புராணக்கதை

சௌராஸ்டிரா தேசத்தை சேர்ந்த பத்ரச்ரவஸ் என்ற மன்னன், மகாவிஷ்ணு வின் சிறந்த பக்தனாக திகழ்ந்தான். அவனது மனைவி சுர சந்திரிகா மாகாராணியாக இருந்தார். பணத்தில் திழைத்ததால் பொன், பொருளை மதிக்காமல் இருந்தார்.

அவருக்கு சியாமபாலா என்ற ஒரு மகள் இருந்தார். தாய், தந்தையரால் மிக சிறப்பாக வளர்க்கப் பட்டு, நல்ல குடும்பத்தில் மண முடித்து கொடுக்கப்பட்டாள்.

ஒரு சமயம் மகாலட்சுமி தாயார், வயதான சுமங்கலி வேடம் தரித்து, சுரசந்திரிகாவின் அரண்மனைக்கு வந் தார். சுரசந்திரிகாவிடம் வரலட்சுமி விரதத்தை விரிவாக கூறி, அதை கடைப்பிடிக்கும் படி கூறி னார். மணம் முடித்த மகளை பிரிந்த ஏக்கத்தில் இருந்த சுரசந்திரிகா, லட்சுமி தேவியை யாரோ என்று கருதி விரட்டி விட்டாள்.


ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

அப்படி விரட்டப்பட்ட லட்சுமி தேவியை, சுரசந் திரிகா மாகாராணி யின் மகள் சியாமபாலா சமாதானப் படுத்தி, அவரிடம் இருந்து வர லட்சுமி விரத முறைகளை விரிவாக கேட்டு உபதேசம் பெற்றாள். பக்தியுடன் விரதத்தை கடைப் பிடித் தாள். விரத மகிமையில் அவள் செல்வச் சிறப்பை அடைந்தாள்.

ஆனால் லட்சுமி தேவியை அவ மானப்படுத்திய அவளது பெற்றோர், வறுமையில் வாடத் தொடங்கினர். இதனை அறிந்த மகள் சியாமபாலா ஒரு குடம் நிறைய தங்கத்தை பெற்றோருக்கு அனுப்பி வைத்தாள். ஆனால் அவர்கள் செய்த தீவினையால் அது கரியாகி விட்டது.



ஆர். சதீஷ்,

இதையடுத்து சியாமபாலா, தன் தாயான சுரசந்திரிகாவிடம் வரலட்சுமி விரதத்தைப் பற்றி சொல்லி பூஜை செய்யும்படி கூறினாள். அவளும் மகள் சொன்னபடி வரலட்சுமி விரதத்தை கடைப்பிடித்து பூஜை செய்தாள். அதன் பிறகு இழந்த செல்வங்கள் மீண்டும் கிடைத்தது.

இதனால் மகாலட்சுமியே சியாமபாலாவைப் பார்த்து வியந்து போனார். மேலும் வரலட்சுமி விரதத்தை கடைப்பிடிக்கும் வீட்டில் நான் பூரணமாக, நிலையாக தங்குவேன்.என் அருள் பூரணமாக கிடைக்கும் என கூறியுள்ளார்.

இந்த விரதத்தை கடைப்பிடித்தாலும், விரத முறையை மற்றவருக்கு சொன்னாலும் புண்ணியம் கிடைக்கும் என்றார். அப்படி அம்பிகையே கூறிய விரதம் என்பதால், அது எவ்வளவு பெரிய சிறந்த விரதமாக இருக்கும் என உணர வேண்டும். மற்ற விரதத்தை விட மிகச்சிறந்த விரதமாக பார்க் கப்படுவதால் கட்டாயம் கடைப்பிடிப்பது நல்லது.

## பலன்கள்:

இவ்விரதத்தின் மூலம் குழந்தை பாக்கிய தடைகள் நீங்கி சற்புத்திர யோகம் உண்டாகும். ஜாதகத்தில் சுக்கிர தோஷம், களத்திர தோஷம், மாங்கல்ய தோஷம் நீங்கும்.

கணவன்மனைவி இடையே இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி அன்யோன்யம் அதிகரிக்கும். இவ்விரதத்தை கடைப்பிடிப்பதால் பிரிந்திருக்கும் தம்பதிகள் ஒன்று சேர்வார்கள்.

இந்த நன்னாளில் அம்மன், கோவில்களுக்கு சென்று நெய்தீபம் ஏற்றி வணங்கி, பக்தர்களுக்கு தயிர்சாதம், சர்க்கரை பொங்கல் பிரசாதம் தரலாம். இல்லாதோர், இயலாதோருக்கு தானம் செய்ய, புண்ணிய பலன்கள் அதிகரிக்கும்.

## கன்னி பெண்கள்

சுமங்கலி பெண்கள் மட்டு மல்லாமல் கன்னி பெண்களும் இந்த விரதத்தை கடைப் பிடிக்கின்றனர்.

ஒரு பெண்ணுக்கு முழுமையான அந்தஸ்தை பெறுவது அவள் திருமண உறவில் ஈடுபடும் போது தான். அவளுக்கு எல்லாமுமாக இருக் கக் கூடியவன் கணவன். அதனால் நல்ல கணவன் அமைய வேண்டும் என லஷ்மியை வணங்கி விரதம் இருக்கின்றனர்.

## விரதத்தால் கிடைக்கும் நன்மை

வர லஷ்மியை வணங்குவதன் மூலம் ஒருவர் அஷ்ட லஷ்மியின் ஆசீர்வாதத்தை பெறலாம்.

ஆதி அல்லது மஹா லஷ்மி (ஆன்மீகக் கற்றளைத் தூண்டுபவர் அல்லது பாதுகாப்பவர்)

தன லஷ்மி (செல்வத்தின் தெய்வம்)

தைர்ய லஷ்மி (தைரியத்தின் தெய்வம்)

சௌ பாக்ய லஷ்மி (நல்ல அதிர்ஷடத்தின் தெய்வம்)

விஜய லஷ்மி (வெற்றியின் தெய்வம்)

தான்ய லஷ்மி (தானியங்களை அருள்பவர்)

சந்தனா லஷ்மி (குழந்தைப் பேறு அருள்பவர்)

வித்யா லஷ்மி (ஞானத்தின் தெய்வம்)

இவ்வாறு, இந்த நாளில் ஒரு வரலஷ்மி விரதத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம், பெண்கள் அஷ்ட லஷ்மியின் ஆசீர்வாதங்களை பெற்றிட முடியும்.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203




மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

# இந்திய புத்தகங்களில் படைப்பின் பெருமையும் இரகசியமுமே அதிகமாக வெளிப்படும்

உபயோகப்படுத்தி கொள்ளும்பொழுது நாம் ஒரு கல்வியைக் கற்கிறோம். தென்னை பனைமரங்களின் காய்ந்த மரப்பகுதியில் உள்ள நார்களை அணில் பயன்படுத்திக் கொள்ளுவதைப் பார்க்கும் பொழுது நமக்கு உரிமட்டை நார்களின் பயன் தெரிகிறது அல்லவா? இதுபோன்ற ஒருமுறை கல்வி முறையைக் கற்பிக்கிறது அல்லவா? இதனால் இயற்கையை வைத்து நாம் படிக்கிறோம். அதன் வழியாக சிருஷ்டியானவைகளின் தத்துவங்களை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறோம். கூடிய வரையில் இப்படிப்பட்ட மனிதர்கள் தங்களுடைய சிறந்த அறிவிற்கு தெரிந்தவரை இயற்கை வளத்தைப் பாழ்படுத்தாமலேயே உபயோகக் கல்வி என்ற உபயோகமான கல்வியை படிக்கிறார்கள்.

❖❖❖

இங்கே நாம் உண்மையாக எதை பிரச்சாரம் செய்தோம் தெரியுமா? இயற்கை கல்வியை. ஒரு உதாரணத்தை கவனியுங்கள். எல்லா மலர்களும் தேனைக் கொண்டுள்ளன. கூடவே மகரந்தச் சேர்க்கைக்கான பொடியையும் தன்னிடம் கொண்டுள்ளது. இந்த மலரினிடத்தில் மனிதனால் எதையும் செய்ய முடியாது. தேனீக்கள் மட்டும் இரண்டு வேலைகளைச் செய்கின்றன. ஒன்று தேனை உணவாக உண்ணுதல், மற்றொன்று மகரந்தச் சேர்க்கையைச் செய்தல், இவ்விரண்டிற்கும் ஒரே மலர்தானே. இங்கு ஆச்சரியம் என்ன என்றால் தேனை எடுக்கும்பொழுது மலர்கள் அழிவதில்லை.




❖❖❖

எதையும் அறிய விரும்பும் உலகமக்களே.. சில கருத்துக்களை உதாரணமாகக் கொள்ளுங்கள். எந்த ஒரு கருத்தையும் அனைத்தும் நம்முடைய செயல்பாட்டிற்கும் உரியதே என்று எடுத்துக் கொள்ளா தீர்கள். மென்மைகளை நாமும் கையாளலாம் என்று பொருள் செய்து கொண்டு எதற்கும் தயார் ஆகி விடாதீர்கள். மலரின் உதார ணத்தைத் தங்களின் சந்தோஷத்திற்காக நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். முயற்சிக்காகவே அல்ல. இவ்வுதாரணத்தினால் நான் சில நல்லுபதேசங்களைக் கருதுகிறேன்.

❖❖❖

நமது முன்னோர்களுக்கு மிகவும் நன்றாக ஒரு கருத்து தெரியும். இதனால் அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் தெரியுமா? மிகவும் திறமையுள்ள தன்மை என்ற மனதின் தன்மையையும் துல்லிய உணர்ச்சியின் பெருமையையும் மேற்கண்டவர்கள் நன்றாகவே உணர்ந்து இருக்கிறார்கள். இது காமம் என்ற உணர்வில் இயற்கையாய் உள்ளது என்பதனால் இதன் பொதுத்தன்மை கெடாதிருக்க ஒரு நன்மை செய்திருக்கிறார்கள். இக்கருத்தை எல்லா இந்திய மொழிகளிலும் சாத்திரங்களிலும் எழுதி வைத்திருக்கிறார்கள்.




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
9444228203


ஆகவே ஒரு இந்தி யனை போன்று காமசூத்திர சாத்திரப் புத்தகங்களை அணுகு. புத்தியில் கூட கலாச்சாரம் உட்பட அனைத்திலும் நீ இந்தியனாய் இருக்க வேண்டும்.

❖❖❖

இந்தியாவிலுள்ள கலாச்சாரப் புராணங்களும் காலத்தால் முந்திய உலோக விக்கிரகங்களும், சிலைகளும், கவிதை, நடனம், இசை இவை அனைத்திலுமே படைக்கின்ற கருத்தோடு இக்கருத்தை இணைத்து எழுதி இருக்கிறார்கள். இந்திய புத்தகங்களில் எல்லாம் படைப்பின் பெருமையும் இரகசியமுமே அதிகமாக வெளிப்படும். மீதமுள்ள சிற்சில இடங்களில் தான் பாலுணர்வு என்ற இக்கருத்து இங்கும் அங்குமாக தெளிக்கப்பட்டிருக்கிறது. நமது நாட்டு மக்களுக்கு இது ஒன்றே முக்கியமான படிப்பு அல்ல.

❖❖❖

கலாச்சார நிகழ்ச்சிகளும் கலாச்சாரம் படிப்பினைத் தருகின்ற கல்வியா இல்லையா? அதை கல்வி என்று சொல்லாதே. அதுவே நமது வாழ்க்கை. வாழ்க்கை என்ற தத்துவத்தில் முழுமையாக கல்வி இருக்கிறது. அதிலே உள்ளடக்கமாக பல்வகை அறிவுக் கல்விகள் மரத்தின் கிளைகளைப் போன்று பிரிக்கப்பட்டு இருக்கின்றன. மேலும் உண்மை என்பது ஒரு பெரிய ஆலமரம். இதுதான் உலகப்படத்தில் இந்தியாவின் விளக்கம்.

❖❖❖

திடீரென்று உணர்ச்சிவயப்படக்கூடிய மக்கள் உலகில் ஏராள மாக இருக்கிறார்கள். பொதுவாக இவர்களில் வலிமையாக உள்ள மனிதனும் உணர்ச்சி வயப்படுகிறான், தொழிலாளியும் படுகிறான். இவர்கள் அனைவருமே ரோஜா இதழ்களுக்கு ஒப்பானவர்கள். ஒரு சிலர் எப்பொழுதும் தங்களது கடமை, வேலை இவைகளை அடிக்கடி எண்ணுவதில் துல்லியமாக இருக்கிறார்கள். இதுவே துல்லியம், துல்லியத்தன்மை இச்சொற்களுக்கு நான் கொடுக்கின்ற விளக்கமாகும்.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

அது பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கம். திருவரங்கத்தை முற்றுகையிட அந்நியர்கள் வருகிறார்கள் என்ற சேதி பரவியது.

அதைக் கேள்விப்பட்டுக் கலங்கியவர்களுக்கு மத்தியில் எப்படியேனும் அரங்கனையும் அவன் மூர்த்தங்களையும் காத்தே தீருவது என்று தீர்மானம் கொண்டு செயல்பட்டார் பிள்ளை லோகாசார்யர். அப்போது அவருக்கு வயது 118 என்கிறார்கள். மூல அரங்கனின் சந்நிதியைக் கல்திரை கொண்டு மூடச்செய்தார்.

அர்ச்சாவதார மூர்த்தமான அழகிய மணவாளப் பெருமானை பூதேவி ஸ்ரீதேவை சமேதராகப் பல்லக்கில் ஏற்றிக்கொண்டு தம் சீடர்கள் சில ரோடு மதுரையை நோக்கி நகர்ந்தார்.

அவர்கள் கானகத்தில் இருந்த வேதநாராயணர் கோயிலில் மறைந்திருந்து சில நாள்கள் சுவாமியை ஆராதனை செய்தனர். ஆனால் அந்நியர்கள் விடாமல் பின்தொடர்வதை அறிந்து அவர்களிடமிருந்து தப்பித்துப் பெருமாளின் திருமேனியைக் காக்க மதுரை ஆனைமலைமீது ஏறுவதைத் தவிர வேறு வழியில்லை என்று முடிவு செய்தனர். குடைவறை மூர்த்தியாக நரசிம்மர் அருள்பாலிக்கும் இந்த இடத்தை அடைந்து அங்கு மறைந்திருந்தனர்.

எதிர்பார்த்ததுபோலவே அந்நியர் படைகளும் வந்து தேடிப்பார்த்துவிட்டு யாரையும் காணாமல் திரும்பிப் போயினர். பிள்ளைலோகாசார்யரும் அவரின் சீடர்களும் மலையில் படர்ந்திருந்த

# அரங்கனை காக்க உயிரை கொடுத்த பிள்ளைலோகாசார்யர்



ஒரு கொடியைப் பற்றிக்கொண்டு இறங்கினர். அப்போது அரங்கனின் திருவுருவை ஒரு கையிலும் கொடியை மற்றொரு கையிலும் பற்றிக்கொண்டு இறங்கினார் பிள்ளைலோகாசார்யர். ஆனால், எதிர்பாராதவிதமாக அவர் கீழே விழ நேர்ந்தது. அந்தக் கணத்திலும் அரங்கனின் மூர்த்தத்தைக் கீழே விடாமல் தன் நெஞ்சோடு சேர்த்து அணைத்துக்கொண்டு வீழ்ந்தார் சுவாமி.

அது நிகழ்ந்த மூன்றாவது நாளில் அவர் பரமபதத்தை அடைந்தார். அவரின் சீடர்கள் தங்கள் குருவின் தியாகத்தை எண்ணி சிலிர்த்தனர். கலியுகம் முழுதும் வைணவ சம்பிரதாயம் நிலைத்து நிற்கும் காலம் மட்டும் நிலைக்கப்போகிற அவரின் தியாகத்தை எண்ணிப் போற்றினர். அவரை அங்கேயே ஐக்கியப்படுத்தினர்.

தான் பெருமாளோடு சேரப்போகிறோம் என்பதை அறிந்துகொண்ட பிள்ளைலோகாசார்யர் தன் சீடர்களுக்கு சில விஷயங்களைக் கட்டளையிட்டார். அதில் முக்கியமானது மீண்டும் அழகிய மணவாளப் பெருமாளை ஸ்ரீரங்கத்தில் சேர்ப்பது. சீடர்களும் அவர் இட்ட கட்டளைகளைத் தவறாமல் நிறைவேற்றினர்.



பிள்ளைலோகாசார்யரின் நினைவாக எழுப்பப் பட்டது ஒரு சிறிய அழகிய ஆலயம். அளவில் சிறிது என்றாலும் சாந்நித்தியத்தில் மிகுந்தது இந்த ஆலயம். அழகிய மணவாளரை வைத்திருந்த குகையில், ஸ்வாமியின் பாதம் பதித்த பீடம் தற்போதும் உள்ளது.

அதனையே ஸ்வாமியாகக் கருதி பூஜை செய்துவழிபடுகிறார்கள் அடியார்கள். இந்த ஆலயத்தில் பிள்ளை லோகாசார்யருக்குத் தனிச் சந்நிதி இருக்கிறது. அவரது அவதார தினமான, ஐப்பசி மாதம் திருவோணத்தன்று இங்கு விசேஷ பூஜைகள் நடைபெறும்.

இங்கே கல்விக் கடவுளான ஸ்ரீஹயக்ரீவரும் எழுந்தருளி அருள்பாலிக்கிறார். இவரே இத்தலத்தின் ஆதி மூர்த்தி என்கிறார்கள். பிரம்மாவிடம் இருந்து படைப்பு ரகசியத்தை எடுத்துச் சென்ற

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



மது, கைடபர் எனும் அசுரர்களிடம் இருந்து அவற்றை மீட்ட திருமால், அவற்றை உடன டியாகப் பிரம்மனிடம் கொடுக்கவில்லை; கவனக் குறைவாக இருந்த பிரம்மனுக்குப் பாடம் புகட்ட நினைத்தார். தனது தவற்றை உணர்ந்த பிரம்மன், பூலோகத்தில் புண்ணியம் மிகுந்த இந்தத் தலத்துக்கு வந்து தவமியற்றினார்.

அவருக்கு மனமிரங்கிய பெருமாள்,பிரம்ம னுக்குப் படைப்பு ரகசியங்களைக் கொடுத்த தோடு, தானே அவருக்கு குருவாக இருந்து வேதத்தையும் உபதேசித்தார்.

இவரே இத்தலத்தில் 'ஹயக்ரீவ' மூர்த்தியாக அருள் பாலிக்கிறார். பெருமாளும் பிரம்மாவுக்கு சங்கு சக்ரதாரியாகக் காட்சி அளித்தார். வேதங் களை உபதேசித்ததால் 'வேதநாராயணர்' என்ற திருநாமமும் பெற்றார். அவரது சந்நிதிக்கு உள்ளேயே, அவரை வணங்கியபடி பிரம்மா வீற்றிருக்கிறார். மனித வடிவில் இங்கே பிரம்மா தவமிருந்ததன் அடிப்படையில், இங்கு பிரம்மா ஒற்றைத் தலையுடன் காட்சியளிக்கிறார். வேறெங்கும் காணமுடியாத பிரம்மனின் அபூர்வமான திருக்கோலம் இது.

ஹயக்ரீவர் மற்றும் வேத நாராயணரிடம் வேண்டிக்கொள்ள கல்வி, கலைகளில் சிறப்பிடம் பெறலாம். தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறலாம் என்பது நம்பிக்கை. குழந்தைகள் கல்வியில் சிறப்பிடம் பெற, சரிவரப் படிக்காத பிள்ளைகள் அந்தக் குறையில் இருந்து நிவர்த்தி பெற இங்கே வேண்டிக் கொள்கிறார்கள்.

கோயிலுக்கு அருகிலேயே பிரம்ம தீர்த்தம் இருக்கிறது; பிரம்மன் உருவாக்கிய தீர்த்தம் இது என்கிறார்கள். அதன் புனிதம் கருதி, எவரும் இதில் நீராடுவதோ, கை கால் அலம்பு வதோ கிடையாது. இங்கு வருபவர்கள், இந்தத் தீர்த்தத்தைப் பிரசாதமாகப் பெற்றுச் செல் கின்றனர். தீராத தோல் வியாதி, நாள்பட்ட காயங்களால் வருந்துவோர், இந்தத் தீர்த்தத்தை எடுத்துச் சென்று, நீரில் கலந்து குளிக்கின்றனர். இவ்வாறு செய்வதால், விரைவில் நோய் குண மாவதாக நம்பிக்கை. வைகுண்ட ஏகாதசியன்று சுவாமிக்கு விசேஷ பூஜைகள் நடக்கும்.

எங்கிருக்கிறது ஆலயம்?

மதுரை திருச்சி நெடுஞ்சாலையில் மதுரையில் இருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில் உள்ளது ஒத்தக்கடை. இங்கிருந்து பிரியும் சாலையில் சுமார் ஒரு கி.மீ. பயணித்தால் ஆனைமலையை அடைந்து, அங்கிருந்து கொடிக்குளம் கிராமத் திலுள்ள இக்கோயிலுக்குச் செல்லலாம். மாட்டுத் தாவணி பேருந்து நிலையத்தில் இருந்து மினி பஸ் வசதி உண்டு.



# கோவிலை காக்கும் துவார பாலகர்கள்

துவாரப்பாலகர் என்றால் வாயிற்காப்பாளர் என அர்த்தம் ஆகும். அந்தக் காலத்தில் அரசர்களுக்கு மெய்க்காப்பாளர்கள் இருந்ததைப் போலவும், தற்போது “Security” என்ற பெயரில் காவலர் இருப்பதைப்போலவும், கோயிலின் சாந்நித்தியத்தைக் காப்பாற்றுவதையே முதன்மையான கடமையாகக் கொண்டவர்கள் துவார பாலகர்கள்.

ஆண் தெய்வத்திற்கு ஆண் துவார பாலகர்களும், பெண் தெய்வத்திற்கு பெண் துவாரபாலகர்களும் இருப்பர்.

இந்த துவாரபாலகர்கள் சேவகர்கள், போர் வீரர்கள், அசுரர்கள் என பல்வேறு வடிவத்தில் இருப்பர். துவார என்பது “வாயில்” என்றும், பால என்பது “காப்போன்” என்றும் பொருள்படும்.

ஆண் தெய்வத்திற்கு ஆண் துவாரபாலகர்களும்,பெண் தெய்வத்திற்கு பெண் துவாரபாலகர்




www.aanmeegamalar.com

களும் இருப்பர். இந்த துவாரபாலகர்கள் சேவகர்கள், போர் வீரர்கள், அசுரர்கள் என பல்வேறு வடிவத்தில் இருப்பர். துவார என்பது “வாயில்” என்றும், பால என்பது “காப்போன்” என்றும் பொருள்படும்.

சிவன் கோவிலில் இருப்பது சண்டி முண்டி, சண்டன் பிரசண்டன், திரிசூலநாதர் மழுவுடையார் போன்ற ஐந்து இணை துவார பாலகர்கள் இருப்பர். சில கோவில் களில் நந்திதேவர் துவாரபாலகராக இருப்பார்.

விஷ்ணு கோவில்களில் ஜெயன் விஜயன் என இருவர் மட்டுமே இருப்பர்.

சக்தி கோவில்களில் அரபத்ரா, சுபத்ரா என இருவர் துவார பாலகிகளாக இருப்பர்.

கருவறையில் எழுந்தருளியிருக்கும் இறைவன் அனைத்தும் அறிந்தவர். நம்முடைய முன்வினைகள் என்னென்ன, நாம் எதற்காக வந்திருக்கிறோம் என்பதையெல்லாம் அறிந்து, முன்வினைகளுக்கு ஏற்ப சுகதுக்கங்களை அனுபவிக்கச் செய்து, நம்மைப் பக்குவப்படுத்தி, நிறைவாக இறைவனை அடைவதற்கு உரிய நிலையை நாம் பெறச் செய்யும் புனித இடம்தான் கோயில்.




எப்படி ஒரு சிசிடிவி கேமரா மூலம்அது பொருத்தப்பட்டிருக்கும்இடத்தில் நடக்கக்கூடிய காரியங்கள் பதிவு செய்யப் படுகின்றனவோ, அதே போன்று கோயிலில் நடைபெறக்கூடிய அனைத்து நிகழ்வுகளும், துவார பாலகர்களினால் கண்காணிக் கப்பட்டு, இறைவனிடம் தெரிவிக் கப்படுகின்றன.

துவாரபாலகர்களிடம்அனுமதி வாங்கிய பிறகே இறைவனை தரிசிக்க வேண்டும்.

கடவுள்களின் சிலாரூபத் துக்கு எந்தளவுக்கு மரியாதை செலுத்துகிறோமோ அந்தளவுக்கு துவாரபாலகருக்கும் மரியாதை செலுத்த வேண்டும்.

துவாரபாலகர்களின் சிலை களை தொடுவதோ, விபூதி, குங்குமம் மாதிரியானவற்றை கொட்டுவதோ கூடாது.





# சந்தன அபிஷேகம், செவ்வரளி மாலை சாற்றி, வில்வத்தால் அர்ச்சனை செய்தால் தள்ளிப்போகும் திருமணம் கைகூடும்

"தென்னூர் கைம்மைத்
திருச்சுழியல் திருக்கானப்பேர்
பன்னூர் புக்குறையும் பரமர்க்கு
இடம் பாய்நலம் என்னூர்
எங்கள் பிரான் உறையும்
திருத்தேவனூர் பொன்னூர்
நாட்டுப் பொன்னூர்
புரிசை நாட்டுப் புரிசையை"

– சுந்தரர்.

இயல் இசை நாடக கலைகளுக்குஎன உலகப் பிரசித்தம் பெற்ற ஒரே புரிசை! தெருக் கூத்திற்கு என காலங்காலமாக வாழும் கலைஞர் கள் அதிகம் உள்ள இந்த ஊரை சுந்தர ரும் மறக்காமல் நினைவில் வைத்து தனது திரு நாட்டுத்தொகையில் வைப்புத் தலமாகப் பாடிப் பரவியுள்ளார்.

கல்தூணிலோ (அ) கற்சுவரிலோ சிற்பங்கள் வடிப்பதை புடைப்புச் சிற்பம் என்பர். அவ்வாறு புடைக்கும் வழக்கம் பல்லவர்களிடமிருந்து மற்ற மன்னர் பரம்பரையினருக்கு வந்தது.

பாண்டியர்கள், விஜயநகர மன்னர்கள், ஹொய்சாலர்கள், நாயக்க மன்னர்கள் என பலரும் இக்கலையில் கை தேர்ந்தவர்கள்என்ற போதிலும், சோழர்கள் பாணியே தனிதான்.

இந்த புடைப்புக்கலையில் புராண நிகழ்வுகளை தத்ரூபமாக வடிக்கும் சோழர்கால கலைஞர்கள் இங்கே (புரிசை) அறுபத்து மூவரது வரலாற் றினைமகாமண்டபத்தின் உட்புறத்திலும், வெளிப் புறத்திலும் எண்ணிக்கையில் அடங்காத வண் ணம் நூற்றுக்கணக்கில் புடைத்துள்ளனர்.

தமிழகத்தின் அனேக சிவாலயங்களில்காணக் கிடைக்காத அதியற்புதமான இந்த புடைப்புச் சிற்பங்களை காணக்காண ஆச்சரியம் மேலிடு கின்றது. இருப்பினும் காலத்தால் சிதைவு கள் காணப்படுகின்றது.

சுவர்களில் கல்வெட்டு செல்களுக்கு பதிலாக இந்த புடைப்புச் சிற்பங்களே அதிகம் காணப் படுகின்றன.





பிற்கால சோழர்களே இந்த அற்புத புடைப்புச் சிற்பங்களை படைத்திருக்க வேண்டும் என்பது ஆய்வாளர்களின் கணிப்பு.

சோழமண்டலத்தின் வென்குன்ற கூற்றத் திற்கு {கோட்டம்} உட்பட்டதாக இந்த புரிசை திகழ்ந்துள்ளது.

இத்தல சிவலிங்கத்தினை அகத்தியர் பூஜித்து வழிபட்டுள்ளார். அதற்குச் சான்றாக நந்திதேவருக்கு முன்னே சாளரத்தின் இடப்புறம் அகத்திய மகரிஷியின் புடைப்புச் சிற்பம் அழகுற வடிக்கப்பட்டுள்ளது.

முதலில் மேற்கு நோக்கிய மூன்று நிலைகள் கொண்ட சிறிய இராஜகோபுரம். படிகளில் ஏறி உள்ளே செல்ல... நேராக பலிபீடம், கொடிமரம், மற்றும் நந்தி மண்டபம். சாளரத்தின் வாயிலாக சுவாமியை தரிசிக்கலாம்.

சாளரத்தின் பக்கச்சுவற்றில் அகத்திய மகரிஷி ஈசனை பூஜிக்கும் புடைப்புச் சிற்பம் தல வரலாற்றுக்குச் சான்றாக உள்ளது.

இடதுபுறம் தல கணபதி தனிச் சன்னதி கொண்டுள்ளார். தென்முக வாயிலின் முன்பு முக மண்டபம் தூண்கள் பல கொண்டுள்ளது.

உள்ளே மகாமண்டபம். இங்கே நடராஜர் சிவகாமியுடன் ஏனைய உற்சவத் திருமேனிகளும் வைக்கப்பட்டுள்ளன. மகாமண்டபச் சுவரின் உள்ளும், வெளியுமாக சிற்சிறு புடைப்புச் சிற்பங்கள் வரிசையாக வடிக்கப்பெற்றுள்ளன. அடுத்ததாக அந்தராளம், கருவறை. கருவறையுள் கருணை வடிவாய் அருட்காட்சியளிக்கின்றார் ஸ்ரீ அகத்தீஸ்வரர்.



மோ.கணேஷ்

மேற்கே திருமுகம் காட்டி அருள்புரியும் பெருமான் திருத்தாள் பணிந்து, ஆலயவலம் வருகின்றோம்.

நந்திமண்டபத்தின் இடப்புறம் அம்பாளின் தனிச் சன்னதி அமைந்துள்ளது. அம்பிகையாக ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி நின்றவண்ணம் எழில் சிந்துகின்றாள். இறைவனும், இறைவியும் இங்கு எதிரெதிரே மாலை மாற்றும் கோலத்தில் வீற்ற ருளுவதால் திருமண வரமருளும் தலமாகத் திகழ்கின்றது.







அம்பாள் சன்னதிக்கு பக்கத்தில் கந்தன் தனது துணைவியரோடு திருவருள் புரிகின்றார். ஆலய ஈசான பாகத்தில் பைரவர் அற்புதமாக காட்சி நல்குகின்றார். கிழக்கு பாகத்தில் நவக்கிரக சன்னதி உள்ளது. அக்னி திசையில் தலவிருட்சமான வில்வ மரம் நெடிதுயர்ந்து நிற்கிறது. அருகே சமயக்குரவர்கள் தனிச் சன்னதி கொண்டுள்ளனர்.

சிறிய ஆலயம் எனினும், சீருடன் திகழ்கின்றது.

ஆலயத்தின் இடப்பக்கத்தில் தல தீர்த்தமான அகத்திய தீர்த்தம் அற்புதமாக உள்ளது.

தினசரி இரண்டு கால பூஜைகள் நடத்தப்படுகின்றன. தினமும் காலை 7 மணி முதல் 10 மணி வரையும், மாலை 5 மணி முதல் 7 மணி வரையும் ஆலயம் திறந்திருக்கும்.

பிரதி சோமவார பூஜை, பிரதோஷங்களோடு, சிவராத்திரி, நவராத்திரி, சஷ்டி, ஆருத்ரா, கார்த்திகை தீபம், குரு பூஜைகள் ஆகியன சிறப்புற நடத்தப்படுகின்றன.

பங்குனி உத்திரம் தொடங்கி, தொடர்ந்து 10 நாட்கள் பிரம்மோற்சவம் விமரிசையாக அனுஷ்டிக் கப்படுகின்றன.

கலைத்துறையில் சிறந்திடவும், கல்வியில் மந்த நிலை மாறிடவும், தள்ளிக்கொண்டேப் போகும் கல்யாணம் விரைவில் முடியவும் இங்கு சுவாமி அம்பாளுக்கு சுத்த சந்தனத்தால் அபிஷேகம் செய்து, செவ்வரளி மாலை சாற்றி, வில்வத்தால் அர்ச்சனை செய்ய சிறந்த பலன் உண்டு என்பது பக்தர் பலரின் அனுபவ வாக்காகும்.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டத்தில் உள்ள இந்த ஊர் செய்யாறு வந்தவாசி பேருந்து சாலையில் 10 கிலோமீட்டர் தொலைவில் மையமாக அமைந்துள்ளது.

ஜோதிட கலாநிதி பழங்காமூர்
மோ.கணேஷ் குருக்கள்,
ஆரணி, தொடர்புக்கு: 9789156179.

# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க aanmeegamalar.com இணையதளத்தை பார்க்கவும்





















# உங்களுக்கு எதுவேண்டும்?
# வரமா சாபமா?

– சத்குரு ஜக்கிவாசுதேவ் –

சிலருக்கு மட்டுமே வாழ்க்கை வரமாக அமை கிறது. பெரும்பாலானவர்கள் வாழ்வை சாபமாக ஆக்கிக்கொள்வதை பார்க்கிறோம். வரம் – சாபம்... இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் சாய்ஸ் அவரவர் கையில்தான் இருக்கிறது என் றால், வரத்தை தேர்ந்தெடுக்கலாமே?!

உலகிலுள்ள ஒவ்வொன்றுக்கும் உங்களைப் பிடித்திருக்கும் விதமாக நீங்கள் வாழப் பழக வேண்டும். பிரபஞ்சம் என்கிற படைப்பும் அதைப் படைத்தவரும் உங்களை நேசித்தே ஆகவேண் டும் என்ற விதமாய் வாழ்வதே வாழ்க்கை. உங்கள் விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றிக்கொள்வ தல்ல வாழ்க்கை. பிரபஞ்சத்தின் ஒவ் வோர் அணுவுக்கும் உங்கள் மேல் பிரியம் தோன்றும் விதமாக வாழும் முறைக்குத்தான் வாழ்க்கை என்று பெயர்.

தான் என்னும் எண்ணம் உங்களுக்குள் இல் லாமல் போனால், இந்தப் பிரபஞ்சமே உங்களுடன் இணைந்து நடனமாடும்.

ஒவ்வொரு மனிதரும் தேர்வு செய்ய இருவேறு வாய்ப்புகள் இன்று உள்ளன. ஒன்றுபடைத்த வனின் அங்கமாகவே வாழலாம். இல்லை யெனில் அபத்தங்களின் தொகுப்பாகவே வாழலாம்.

இந்த இரண்டிலிருந்து ஒன்றைத் தேர்வு செய்யும் உரிமை வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் உங்க ளுக்குக் காத்திருக்கிறது. இந்த உணர்வு உங்களுக்கிருந்தால் உங்களைச் சுற்றியுள்ள பாறைகள், பூக்கள், என்று படைப்பின் ஒவ் வோர் அணுவும் உங்களுக்குப் புரிகிற பாஷையில் உங்களுடன் பேசும்.

சரியான தேர்வை நீங்கள் செய்தால் சரி யான விஷயங்கள் நிகழ்கின்றன. தவறான தேர்வைச் செய்தால் நடப்பவை எல்லாம் தவறாகவே போகின்றன. வெற்றியும் தோல்வியும் இந்த அடிப் படையில்தான் நிகழ்கின்றன. எனவே வலியும் துயரமும் வருத்தமும் வந்தால் யார்மீது பழியைப் போடலாம் என்று அங்குமிங்கும் பார்க்காதீர்கள்.

விழிப்புணர்வே இல்லாத மனிதர்கள்தான் தங்கள் காயங்களுக்கு வெளியே காரணங்களைக் கண்டு பிடிப்பார்கள். உங்கள் வரங்களும் சாபங்களும் உள்ளிருந்தே நிகழ்கின்றன. இதை உணர்ந்து நடந்தால் உங்கள் வாழ்க்கை அழகாகவும் அற்புதமாகவும் மாறும். இது புரிய ஒரு பிறவியையே எடுத்துக் கொண்டால் வாழ்க்கை தன்னுடைய வழிகளில் உங்களுக்குப் பாடம் கற்பிக்கும். வரம் வேண்டுமா? சாபம் வேண்டுமா? தேர்ந்தெடுங்கள்.

பொறுமையைவிட மேலான தவமு மில்லை. திருப்தியை விட மேலான இன்பமு மில்லை. இரக்கத்தை விட உயர்ந்த அறமுமில்லை. மன்னித் தலை விட ஆற்றல் மிக்க ஆயுதமில்லைஞ்!

தோல்விகள் சூழ்ந்தாலும். இருளை விளக்கும் கதிரவன் போல அதனை நீக்கி அடுத்தடுத்த வெற்றி படியில் கால் அடி எடுத்து வையுங்கள். முடியும் வரை அல்ல, உங்கள் இலக்கினை அடையும் வரை. இந்த விடியல் உங்கள் வாழ்விலும் விடியட்டும்!








# ஆன்மிக உலகின்

# முதல் இலவச

# இணைய இதழ்












## இதுவரை வெளிவந்த
## அனைத்து இதழ்களையும்
## கட்டணமின்றி

aanmeegamalar.com
aanmeegamalr (app)–ல்
படித்து பயன்பெறலாம்

சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு
முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி,
தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு,
போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

## கொரானாவை விரட்டுவோம்

# ஆன்மீக வழியில் அமைதி

ஒரு பொருள் நம்மிடம் இருக்கிறது. அதாவது பணம், நிலம், வீடு, பொன்பொருள் எது வேண்டுமானாலும் இருக்கலாம். ஒருவர் தன்னோட அலுவலக நண்பர் வீட்டில் விலை உயர்ந்த தொலைக்காட்சிப்பெட்டியைப் பார்க்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அதன் மீது ஒரு ஆசை அவரை அறியாமல் வந்து விடுகிறது. அதேமாதிரி தொலைக்காட்சிப்பெட்டி தன்னோட வீட்டில் இருந்தால் எப்போதும் தானும் தன்னோட குடும்பமும் மகிழ்ச்சியுடன் இருக்கலாம் என்று தனக்குள் தேவையற்ற கற்பனையை வளர்த்துக் கொள்கிறார். அதனால் அவரை அறியாமல் அந்த ஆசையானது அவருடைய மனதில் நன்கு பதிந்து விடுகிறது. அவர் தொலைக்காட்சிப்பெட்டி தன் வீட்டில் இருந்தால் தனக்கு இன்பமாக மகிழ்ச்சியாக இருக்கும் என மனதில் மீண்டும் மீண்டும் எண்ணிக்கொண்டே இருக்கிறார். அவ்வாறு எண்ணும்போது அந்தப் பொருளினால் வரக்கூடிய இன்பம் மகிழ்ச்சி போன்றவை ஆசை பேராசையாக உருவாகி, அவர் மனதில் நன்கு பதிந்தும் விடுகிறது.

மனிதர்கள் நிலம் சொத்து வீடு வாகனம் போன்றவற்றினால் வரக்கூடிய மகிழ்ச்சி இன்பம் உலகில் நிரந்தரம் என்று தவறாக மனதில் எண்ணி விடுகிறான். அதனால் அவன் அத்தகைய பொருட்கள் தனக்கு கிடைத்து விட்டால் அப்பொருள் தன்னை விட்டு அகலாமல் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்றும் மனதில் எண்ணி விடுகிறான். மேலும் அத்தகைய பொன்பொருட்கள் குறைந்து விடாமல் இருக்க வேண்டும் என்று மனதில் எண்ணி அதனை பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறான். அதனால் அவன் மன அமைதியைக்கூட இழந்து விடுகிறான்.

நாளடைவில் பொன்பொருள் மற்றும் சொத்துக்கள் மீது அவனுக்கு அளவுகடந்த பேராசை ஏற்பட்டு விடுகிறது. ஆன்மீக வழியில் சென்று மனிதன் சிந்திக்கும்போது நிலம் சொத்து வீடு வாகனம் போன்றவற்றினால் வரக்கூடிய மகிழ்ச்சி இன்பம் உலகில் நிரந்தரம் இல்லை என்று உணர்ந்து கொள்கிறான். அவ்வாறு மனிதன் உணர்ந்து கொள்ளும்போது அவற்றின்மீது அவனுக்கு விருப்பம் மட்டும் இருக்கும். அவன் மனதில் பேராசையோ அதனையெல்லாம் அடைய வேண்டும் என்ற வெறியோ அவனுக்கு ஏற்படுவதில்லை. மனிதன் இதனையெல்லாம் நன்கு உணர்ந்து இத்தகைய பேராசையில் இருந்து விடுபடும்போது அவன் தேடும் விரும்பும் மன அமைதி கிடைக்கும்.

பொன்பொருள் சொத்துக்கள் மூலம் வரக்கூடிய இன்பம் மகிழ்ச்சி நிரந்தரம் என்று நினைத்துக் கொள்வதற்கு காரணம் நம்மிடம் உள்ள அறியாமை என்ற இருள்தான். அறியாமையின் காரணமாக இந்த உலகில் உள்ள பொருட்களின் மீது அப்பொருட்களின் மூலம் வரக்கூடிய இன்பம் ஆனந்தம் நிரந்தரம் என்று மனதில் நாம் தவறாக நினைப்பதால்தான் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஒருவர் சங்கீதத்தில் பேரும்புகழும் பெறுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் முதுமை பெற்று விட்டாலோ அல்லது அவரைவிட சங்கீதத்தில் திறமைசாலி அவருக்கு போட்டியாக வந்து விட்டாலோ முன்னவரின் பேரும்புகழும் காணாமல் போய்விடும். அந்த பேரும்புகழும் அவருக்கு நிரந்தரம் இல்லை என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ளலாம். இவ்வுலகில் காணும் எந்தவிதமான பொருளுக்கும் நமக்கு நிரந்தரமாக இன்பத்தை மகிழ்ச்சியைத் தரக்கூடிய சக்தி இல்லை. அப்படி இருப்பதாக மனதில் வீணாக எண்ணுவது கற்பனையில் மிதப்பது நமது அறியாமை ஆகும்.

நமது இத்தகைய அறியாமைக்கு காரணம் என்ன என்று கேட்க முடியாது. நாம் இவ்வுலகில் பிறந்ததிலிருந்து நம்மோடு அறியாமையும் சேர்ந்தே இருக்கிறது. நம்மிடம் ஒரு விலை உயர்ந்த பொருள் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதனால் அந்தப் பொருளினால் வரக்கூடிய இன்பம் மகிழ்ச்சி போன்றவை நமக்குத் தொடர்ந்து கிடைப்பதில்லை. மேலும் அப்பொருளினால் சிலநேரங்களில் நமக்கு துன்பத்தையும் கொடுக்கும் என்பதைகூட நாம் அறிந்து கொள்வதில்லை. அதற்கு முக்கிய காரணம் நமது அறியாமை ஆகும்.

24

மனிதனுக்கு ஒரு பொருளினால் வரக்கூடிய இன்ப துன்பங்களை அனுபவிப்பது நமது ஸ்தூல உடல்தான்.

அதே உடல்தான் நோயினாலோ மற்றவற்றாலோ துயரத்தை அனுபவிக்கிறது. தென்றல் காற்று, மிதமான குளிர் காற்று போன்ற நல்ல இயற்கை சூழ்நிலையில் உள்ள இன்பதை எல்லாம் இந்த ஸ்தூல உடல் மூலமாக நாம் உணர்கிறோம். கோடையில் அதிக வெயில், குளிர்காலத்தில் அதிகக் குளிர், புயல் காற்று போன்றவற்றால் சூழ்நிலை பாதகமாக இருக்கும்போது துயரத்தையும் நமது ஸ்தூல உடல்தான் உணர்கிறது அல்லது அனுபவிக்கிறது. இதிலிருந்து நாம் என்ன உணர்கிறோம் என்றால் துன்பத்தையும் இன்பத்தையும் அனுபவிப்பது மனம் அல்ல நமது ஸ்தூல உடல்தான் என்று அப்போது நமக்கு நன்றாகப் புரிகிறது.

பொன்பொருள் சொத்துக்கள் போன்றவற்றின் மூலம் வரக்கூடிய இன்பத்தை மட்டும் நாம் இந்த ஸ்தூல உடல் மூலம் அனுபவித்து உணர்கிறோம். அந்தப் பொருட்களின் மூலம் நம்மையும் அறியாமல் வரக்கூடிய துன்பங்கள் துயரங்களை பற்றி அப்போது யாரும் நினைத்துக்கூட பார்ப்பதில்லை. அப்பொருட்களின் மூலம் நமக்கு துன்பங்கள், துயரங்கள் வந்தபோதுதான் அவற்றை பற்றி உணர்கிறோம். ஒரு பொருள் மூலம் வரக்கூடிய இன்பத்தை மகிழ்ச்சியை மட்டும் அப்போது நினைத்து பார்க்கிறோம்.

அப்பொருளினால் துன்பத்தையும் அனுபவிக்க நேரிடும் என்பதை அவன் சிந்தித்துக்கூட பார்ப்பதில்லை. அவ்வாறு நமது மனம் சிந்தித்துப் பார்த்தால் அந்தப் பொருளினால் வரக்கூடிய இன்பத்தின்மீது மகிழ்ச்சியின்மீது அளவுகடந்த ஆசையோ பேராசையோ நம்மிடம் ஏற்படுவதில்லை. மனிதன் இவற்றையெல்லாம் ஆன்மீக வழியில் சிந்தித்து செயல்படும்போது துன்பம் வரும்போது துவண்டு விடுவதில்லை, இன்பம் வரும்போது மகிழ்ச்சியில் துள்ளிக்குதிப்பதில்லை. அவன் இரண்டையும் சமமாக கருதி மனம் ஏற்றுக்கொள்ளும்போது அவன் தேடும் விரும்பும் மன அமைதி கிடைக்கும்.

ஒரு பொருள் நமக்கு ஒரு சூழ்நிலையில் இன்பத்தை மகிழ்ச்சியைக் கொடுக்கிறது அதேபொருள் வேறொரு சூழ்நிலையில் நமக்குத் துன்பத்தையும் கொடுக்கிறது என்பதை நம்மில் யாரும் நினைத்துகூட பார்ப்பதில்லை. நாம் அதனை சிந்தித்துப் பார்க்க வேண்டும். பொன்பொருள்களை மென்மேலும் சேர்த்துக் கொள்ளும்போது, உற்றார் உறவினார்களால் தனக்கு எந்தக் காலத்திலும் துன்பம், துயரம் வந்தததில்லை என்று பெருமையாக சிலர் கூறிக்கொள்வார்கள். மனிதர்களுக்கு முதுமை, பிணி, மரணம் போன்றவைகள் இருக்கிறது என்பதையே அவர்கள் அப்போது மறந்து விடுகிறார்கள்.

மனிதன் மகிழ்ச்சியாக இன்பமாக சுகமாக வாழ்ந்துகொண்டு இருக்கும்போது ஏற்படும் முதுமை, நோய்கள், மரணம் போன்றவை உற்றார் உறவினர்களைப் பிரித்து விடும் என்பதை உணர்வதில்லை. அவ்வாறு நமது அறிவு உணர்ந்து கொண்டிருந்தால் எதிர்காலத்தில் வரக்கூடிய துயரத்தை நாம் பெரிதாக எடுத்துக்கொள்ள மாட்டோம். அதனால் பாதிப்பும் அடையவும் மாட்டோம். ஆரம்பத்தில் இவற்றையெல்லாம் நன்கு சிந்தித்து வாழ்ந்து வரும்போது நமது மனம் ஓரளவுக்கு பக்குவ நிலைக்கு வந்து விடுகிறது.

உற்றார் உறவினர்கள் தன்னை விட்டு ஏதோவொரு சூழ்நிலையில் பிரிந்து சென்றபின்தான் உறவினர்கள் மூலம் துன்பம் துயரம் போன்றவை வருகிறது என்பதையே மனிதனால் அப்போது உணரப்படுகிறது. இதிலிருந்து மனிதன் தனது நெருங்கிய உற்றார் உறவினர்களால் துயரம், துன்பம் போன்றவை தனக்கு வருவதே இல்லை கூறமுடியாது. எடுத்துக்காட்டாக உறவினர்கள் வீட்டில் நிகழும் ஜனனம் மகிழ்ச்சியைக் கொடுக்கும் அதே உறவினர் வீட்டில் நிகழும் மரணம் துன்பத்தைக் கொடுக்கும். உலகில் காணும் எந்தவிதமான பொருட்களை எடுத்துக் கொண்டாலும் அந்த பொருட்களினால், உறவுகளினால் வரக்கூடிய இன்பமும் துன்பமும் நம்மை அறியாமல் நம்முடன் சேர்ந்தே வரும் என்பதை இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள முடியும்.

நாம் செய்தித்தாள்கள் மூலம் எத்தனை மரணச்செய்திகளைப் படிக்கிறோம். தொலைக்காட்சியின் மூலம்



எத்தனை மரணச்செய்திகளைக் கேட்டும் பார்த்தும் இருந்திருப்போம். அந்த மரணச்செய்திகள் அனைத்தும் நமது உடலையோ மனதையோ பெரிதும் பாதிப்பு அடையச் செய்வதில்லை. ஆனால் நெருங்கிய உற்றார் உறவினர்களின் மரணச்செய்திகள் மட்டும் சம்பந்தப்பட்டவரை அடையும்போது அவனது மனமும் கண்களும் கலங்குவதைப் பார்க்கலாம். அப்போது உறவின் பிரிவின் மூலம் வரக்கூடிய மரணம் என்னும் துன்பத்தை மரணத்தின் தன்மையை அவர்கள் உணர்கிறார்கள்.

மரணம் என்ற ஒரு நிகழ்வு உறவு முறையாக இருந்தால் ஒருவருக்கு துன்பத்தையும் துயரத்தையும் கொடுக்கிறது. அதே மரணம் நெருங்கிய உறவுகள் இல்லை என்றால் நமது மனம் துயரப்படாமலும் துன்பப்படாமலும் இருக்கிறது. அதாவது செய்திதாளில் படிக்கும் மரணங்களோ, தொலைக்காட்சியின் மூலம் வரக்கூடிய மரணங்களோ மனித உள்ளங்களில் துயரத்தால் பெரும்பாலும் பாதிப்பது இல்லை. இதிலிருந்து மரணச்செய்தி நம் உறவுகள் சம்பந்தப்பட்டவையாக இருந்தால்தான் துயரம் கொள்கிறோம். மற்றவர்களின் மரணச்செய்திகள் நமது மனதைப் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை என்பதை அனுபவபூர்வமாக உணரலாம்.

பொன்பொருள் சொத்துக்கள் போன்றவை அல்லது உற்றார் உறவினர்கள் மூலம் வரக்கூடிய இன்பத்தின் ஒருபகுதியை மட்டும் நினைத்துப் பார்த்து மகிழ்கிறோம். ஆனால் அப்பொருளின் மூலம் அல்லது உற்றார் உறவினர்கள் மூலம் வரக்கூடிய துன்பத்தின் மறுபகுதியினை நாம் மகிழ்ச்சியுடன் இருக்கும்போது மனம் நினைத்துக்கூட பார்ப்பதில்லை. அவ்வாறு ஒரு பொருளின் மூலம் உறவுகள் மூலம் வரக்கூடிய துன்பத்தின் பகுதியினை நாம் அறிந்து கொண்டால், நாம் அப்பொருள் மீது நம்மை அறியாமல் பேராசை கொள்ள மாட்டோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு பொருளின் மீது நம்மை அறியாமல் அதன்மீது பேராசை கொள்ளக்கூடாது என்று மனதில் வைராக்கியம் வைத்திருந்தால் அப்பொருளினைப் பார்த்தவுடன் அதனால் வரக்கூடிய இன்பத்தையும் மறந்துவிடத் தோன்றும். அவ்வாறு மறந்துவிடும்போது அப்பொருளின் மீது ஆசை பேராசை என்னும்



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

இருள் நம்மை சூழாது. ஒரு பொருளின் நித்தியம் அநித்தியம் துன்பம் இன்பம் இவற்றினை பற்றி விவேக அறிவினால் அறிந்து நாம் செயல்படும்போது நாம் மன அமைதி பெறுவதற்கு வாய்ப்புண்டு. நாம் பொன்பொருள் சொத்துக்கள் போன்றவற்றின் மீது பேராசைப்பட்டு அதன் மூலம் வரக்கூடிய இன்பத்தை மகிழ்ச்சியை ஏற்கனவே நமது மனதில் பதிந்து வைத்திருக்கிறோமே, அவற்றை நமது மனதிலிருந்து எவ்வாறு நீக்குவது என்று நமக்கு கேட்கத்தோன்றும்.

நாம் ஆன்மீக வழியில் சென்று நமது உள்ளத்தில் முதலில் தோன்றக்கூடிய ஆசைகளை எண்ணங்களை மனதில் புகுந்து விடாமல் தடுக்க வேண்டும். மனதில் ஏற்கனவே பதிந்துள்ள ஆசைகளை அப்பொருட்களினால் வரக்கூடிய துன்பம் துயரத்தை இடைவிடாமல் நமது விவேக அறிவின்மூலம் பிரித்து அறிந்து அவற்றினை நீக்குவதற்கு முயற்சிகளை ஆன்மீக வழியில் மேற்கொள்ள வேண்டும். முயற்சி திருவினையாக்கும் என்று வள்ளுவர்பெருமான் நமக்கு குறள்மூலம் விளக்கியுள்ளார். மேலும் நமது மனதில் பதிந்துள்ள பேராசையை அப்பொருளில் உள்ள குறைகளை மீண்டும் மீண்டும் நினைத்து அதனை மனதிலிருந்து முற்றிலும் நீக்க வேண்டும். அவ்வாறு மீண்டும் மீண்டும் அப்பொருட்களினால் வரக்கூடிய இன்ப துன்பங்களை மனதில் நினைத்துப் பார்ப்பதுகூட ஒருவிதமான தியானம் ஆகும்.

மனிதனுடைய மரணத்தினை சற்று நினைத்து சிந்தித்துப் பாருங்கள். மனிதன் மரணத்தை நினைத்து வருந்துவதுகூட மனிதர்களின் மனநிலைகள் பலவிதங்களில் செயல்படுவதை காணலாம். நம்மோடு நன்றாகப் பழகி மகிழ்ந்தவர்கள் மரணம் அடைந்துவிட்டால், மரணம் அடைந்தவர் மீது ஓரளவு பற்றுக்கொண்டவர்கள், மரணம் அடைந்தவரால் மிகுந்த பயன்பெற்றவர்கள் போன்றவர்கள் வேண்டுமானால் சிலகாலம் வருத்தப்படுவார்கள். அப்படி வருத்தம் அடைந்தவர்களும் சில நாட்களில் மன ஆறுதல் அடைந்து அவர்களையறியாமல் தங்கள் இயல்பு நிலைக்கு வந்து விடுவதையும் நாம் உலக நடைமுறையில் பார்க்கிறோம்.

மரணத்தை தழுவியரை நினைத்து சிலர் வெளிபார்வைக்கு துயரத்தினை

காட்டிக்கொண்டு, தங்கள் மனதிற்குள்ளேயே மகிழ்ச்சி அடைவார்கள். இதனை யாரும் மறுக்க முடியாது. மரணம் அடைந்தவருக்கு சொத்துக்கள் அதிகம் இருந்தால், அவர் மரணம் அடைந்ததால் சொத்து சுகம் சேர்வதை நினைத்து மனதிற்குள்ளேயே அவருடைய வாரிசுகள் சிலர் மகிழ்ச்சி அடைவார்கள். மனிதர்களில் இப்படி போலியான துயரம் காட்டும் பொய்முகங்களை நாம் உலக நடைமுறையில் எத்தனையோ பார்க்கிறோம்.

அதனால்தான் வள்ளல்பெருமான் ‘எவ்வுயிரும் தம் உயிர்போல் நினை’ என்று கூறியுள்ளார். மேலும் அவர் ‘உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்’ என்று இறைவனிடம் மனம் உருகி வேண்டுகிறார். இவற்றையெல்லாம் மனிதன் உணர்ந்து உண்மையை கடைபிடிக்கும்போது அவன் விரும்பும் தேடும் மன அமைதி கிடைக்கும். மேலும் நாம் போலியான வாழ்க்கை வாழவில்லை என்று மனதில் நினைத்து ஒரு நிம்மதியும் அவர்களையும் அறியாமல் அவருக்கு கிடைக்கும்.

நம் உடல் பாகங்களில் சில செயல்படவில்லையானால் நமக்கு எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து சிந்தித்துப் பாருங்கள். நமது உடலின் ஒவ்வொரு உறுப்பின் அவசியம் அப்போது தெரிய வரும். திடீரென ஒருவர் கீழே விழுந்து கால் எலும்பு முறிந்து விட்டால் அவர் நடக்க முடியாமல் எவ்வளவு துன்பப்படுகிறார். அப்போதுதான் முறிந்தகாலின் அவசியம் அறிந்து உணர்ந்து முறிந்த அந்தக்காலின் முறிவுக்கு கட்டுப்போட்டு ஒவ்வொருகணமும் கவனமாக முறிந்திருந்த காலை பார்ப்போம். அதுவரை அந்தக் காலினைப்பற்றி நடப்பதற்கு பயன்பட்டதைப் பற்றி நினைத்துக்கூட பார்த்திருக்க மாட்டோம். அப்படி நினைத்துப் பார்ப்பதே ஒரு வகைத் தியானம்தான் என்பதை நாம் அப்போது உணர முடியும்.

அவ்வாறு ஒவ்வொரு பொருளைப்பற்றியும் அதன் மூலம் வரக்கூடிய இன்பம் துன்பம் பற்றி சிந்தித்தாலே அது ஒரு தியானம்போல் இருக்கும். இதனையெல்லாம் சிந்தித்து நமது மனம் தெளிவடையும்போது, நம்மை அறியாமல் மன அமைதி நமக்கு கிடைக்கும். இவற்றை எல்லாம் நாம் ஆன்மீக வழியில் சென்றுதான் காண வேண்டும். இவ்வாறு ஆன்மீக வழியில் சிந்திக்க சிந்திக்க எந்தப்பொருள்கள் மீதும் நாம் பேராசைபடுவதற்கு நினைக்க மாட்டோம். அப்படியே ஆசைப்பட்டாலும் அப்பொருளினால் வரக்கூடிய இன்பத்தில் மகிழ்ச்சியில் முழுமையாக மூழ்கி விடாமல், அப்பொருளின் மீது உள்ள ஆசைகள் சிறிதுசிறிதாக நமது மனதை விட்டு நாளடைவில் அகன்று விடும். அவ்வாறு ஆசைகள் நம்மைவிட்டு அகலும்போதுதான் நாம் தேடும் விரும்பும் மன அமைதி தானாக நம்மை வந்தடையும்.

நல்ல எண்ணங்களை மனதில் நிரப்பி அதன்மூலம் நல்ல செயல்பாடுகளை கடைப்பிடிக்கச் செய்வதும் ஒருவிதமான தியானம் என்று ஆன்மிகம் கூறுகிறது. துயரங்களை துன்பங்களை நினைத்து அதனை மனதில் இருந்து அகற்றுவதும் மற்றொரு தியானம் ஆகும். பிறர் மரணத்தைப் பற்றி நம் உள்ளத்தில் தோன்றியதை மற்றவர்களிடம் வெளிப்படையாக கூறாமல் நாம் ரகசியமாக வைத்துக் கொள்ளவேண்டும். ‘பணம் சொத்து இருக்குது என்ற திமிரில் எப்படியெல்லாம் ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தவர் இப்படி தன்னோட சொத்து சுகத்தையெல்லாம் இழந்து இப்படி அடங்கி போய் சேர்ந்து விட்டார்’ என்று சிலர் அவர் மரணம் குறித்து தங்களுக்குள் கூறிக்கொள்வார்கள். இதனை சம்பந்தப்பட்ட நெருங்கிய உறவினர்களிடம் கூறினால் என்ன நடக்கும் என்று சற்று கற்பனை செய்து பாருங்கள்.

மனிதனுடைய மரணம் உற்றார் உறவினர்களின் மரணம் ,செல்வம், சொத்து, புகழ் ஆகியவையெல்லாம் நிரந்தரம் அல்ல, அநித்தியம் என்று அறிந்துகொண்டு நாம்





ஆன்மீக வழியில் அமைதி காண வேண்டும். ஒரு கிரிக்கெட் வீரர் ஒரு காலத்தில் உலகளவில் புகழ் பெற்று விளங்கி இருப்பார். அவர் ஓய்வு பெற்றபின் அல்லது அவரைவிட திறமையாக விளையாடுபவர் வந்துவிடும்போது, காலப்போக்கில் அவருடை புகழ் மங்கி காணாமலே போய்விடும். இதிலிருந்து இவ்வுல கில் காணும் பொருள்கள் அனைத்தும் மனிதர் களுடைய புகழ் பெருமை உள்பட அனைத்தும் அநித்தியமானவை என்பதை புரிந்து கொள்ளலாம்.

இவற்றையெல்லாம் நாம் ஆன்மீகத்தின் துணையோடு சிந்தித்துப் பார்த்து ஆன்மீக வழியில் செயல்பட்டால், நாளடைவில் மனம் பக்குவநிலை அடைந்து உலகில் உள்ள எந்தப்பொருளின் மீதும் ஆசையோ பேராசையோ கொள்ளமாட்டோம். அந்தப் பொருட்களை அடைவதற்கான முயற்சியையும் கைவிட்டு விடுவோம். அவ்வாறு மனம் பக்குவநிலைக்கு வரும்போது நாம் தேடும் விரும்பும் மன அமைதி நம்மைத் தேடி வந்து விடும். மனித வாழ்வின் பிறப்பு இறப்பு பற்றி ஆன்மீக வழியில் நினைக்க நினைக்க நிலையற்ற பொருள்களின் மீது உள்ள பற்று பேராசை சிறிதுசிறிதாக குறைந்து நாளடைவில் மனம் பக்குவ நிலையை அடைந்து விடும். நமது விவேக அறிவு மலர்ந்து பூரணமான வைராக்கியம் கிடைக்கும். உயிரினங்களுக்கு உதவி செய்தல், தர்மசெயல்களில் ஈடுபடுதல், கோபப்படாமல் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, மற்றவர்கள் நமக்குச் செய்யக்கூடிய துன்பங்களை கண்டு சகித்து கொள்ளுதல், தியாக மனப்பான்மை, இன்னா செய்தாருக்கும் இனியவை செய்தல் போன்றவற்றினால், நமது மனம் பக்குவநிலையை அடைந்து பூர்ண வைராக்கியம் நமது உள்ளத்தில் மலரும். அதற்கு பொறுமையும் மன உறுதியும் அவசியம் இருக்க வேண்டும். ஏற்கனவே இருந்த பேராசையை விவேக அறிவு மூலம் அறிந்த பின், ஒரு பொருள் மீது உள்ள ஆசை பேராசை போன்றவற்றை வைராக்கியத்தின் துணை கொண்டு மனதிலிருந்து அகற்றுவதற்கு முயல வேண்டும்.

ஆன்மீக வழியில் சிந்தித்து செயல்படும் போது பொன்பொருள் சொத்து போன்றவற்றின் மீதோ அல்லது உற்றார் உறவினர்கள் மீதோ பொறாமை பேராசை போன்ற எண்ணங்கள் நம் மனதிலிருந்து சிறிது காலத்தில் மறைந்து விடும். அவ்வாறு மறைந்து விடும்போது 'ஈஸ்வர தரிசனம், இன்பம் துன்பம் 'எல்லாம் பகவான் செயல்' 'அவனின்றி ஓர் அணுவும் அசையாது' என்ற மன நிலைக்கு படிப்படியாக நமது மனம் பக்குவம் அடைந்து மனஅமைதி கிடைத்து விடும்.

ஆன்மீக வழியில் சென்று இத்தகைய ஞானம் வந்து விட்டால், உலகில் உள்ள எந்தப்பொருட்களின் மீதும் விருப்போ வெறுப்போ உண்டாவதில்லை. அனைத்தையும் அதாவது துன்பத்தையும் இன்பத்தையும் சமமாக நினைக்கச் சொல்லும். வாழ்வில் இன்பம் வந்துவிட்டால் மகிழ்ச்சி அடைவதும் துன்பம் வந்துவிட்டால் துவண்டு விடாமல் மனம் சம நிலைக்கு வந்துவிட்டால் நமது மனம் பக்குவ நிலைக்கு வந்துவிட்டது என்பதை அறிந்து கொள்ளலாம்.

பொதுவாக விவேகத்திலிருந்து வரக்கூடிய வைராக்கியம்தான் நமது மனதில் நிலைத்து நிற்கும். மனக்கட்டுப்பாடு மன பக்குவ நிலை மனஅமைதி ஆகியவை கிடைப்பதற்கு வைராக்கியம் துணை புரியும். இதனை இதிகாசங்கள் உபநிடதங்கள் வேதங்கள் மூலம் இவற்றை அறிந்து கொள்ளலாம். மேலும் இதனை அனுபவத்தின் மூலம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளலாம். நாம் ஆன்மீக வழியில் உயர்ந்த கருத்துக்களை படிக்கும்போது கேட்கும்போது தியானம் போன்ற பயிற்சிகளை மேற்கொள்ளும்போது நாம் தேடும் விரும்பும் மனஅமைதியைப் பெறலாம்


**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**

Tahsildar (Retd)

கைபேசி: 9894043308



**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**

**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**

Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com


மொபைலில்
ஆன்மிகமலரை
முழுவதும் படிக்க
Google Play Store
aanmeegamalar
டவுன்லோடு செய்து
Google Play
Aanmeega Malar - ஆன்மீக மலர் - All in One App
Installed
aanmeegamalar
Subscribe
MONEY
இதழ் முழுவதும்
இலவசமாக
படிக்கலாம்...
நேரடி மற்றும் மறைமுக கட்டணங்கள் ஏதுமில்லை